E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 டிசம்பர் 31 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 310 | Saturday 31, December, 2022 | 12 பக்கங்கள்


## 2023 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?



2023 ஆம் ஆண்டில் உங்கள் ராசிக்கு எவ்வாறான பலன்கள் ஏற்படப் போகின்றன என்பதை கணித்துக் கூறுகிறார் தமிழ் நாட்டின் பிரபல ஜோதிட

06

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்கிய

# வவுனியாவில் பதுக்கப்பட்ட 1,272 Kg இந்திய அரிசி மூடைகள்

## பாவனைக்கு உதவாத நிலையில் மீட்கப்பட்டது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய அரசாங்கத்தால் நிவாரணத்துக்காக வழங்கப்பட்ட 1,272 கிலோ அரிசி மீட்கப்பட்டுள்ளது. இவை பாவனைக்கு தவாத நிலையிலேயே மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மதுராநகர் கிராமத்தின் பொது நோக்கு மண்டபத்தில் அரிசி மூடைகள் சில இருப்பதாக கிடைத்த தகவல்களுக்கு அமைவாக மண்டபத்தை அப்பகுதி மக்கள் கடந்த புதன்கிழமை சோதனை செய்த போது இந்திய அரசாங்கத்தால் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட அரிசி மூடைகள் ஒரு தொகுதி கண்டு பிடிக்கப்பட்டது.



**ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள மதுராநகர் கிராம பொதுநோக்கு மண்டபத்திலிருந்து மீட்பு**

இந்திய அரசாங்கத்தின் இலச்சினையுடன் கண்டு பிடிக்கப்பட்ட அரிசி மூடைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் பல மாதங்களாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தமையால் அவை புழு, வண்டு மற்றும் எறும்புகள் நிறைந்து பாவனைக்கு உதவாத நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு உதவும் நோக்கோடு தமிழக அரசினால் சுமார் 06 மாதங்களுக்கு முன்னர் உலருணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

06

மோடியின் தாயார் மறைவுக்கு

## ஜனாதிபதி ரணில் அனுதாபம் தெரிவிப்பு

**கால்பந்து வீரர் பீலேவுக்கும் இரங்கல்**



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் மற்றும் பிரேசிலின் முன்னாள் கால்பந்து வீரர் பீலே ஆகியோரின் மறைவையிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் அன்புத் தாயாரின் மறைவால் ஆழ்ந்த வருத்தம் அடைகிறேன்.

06

## வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் சேவைக்கான கட்டணம் அதிகரிப்பு



இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் சேவைகளுக்கான கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

16.11.2022 திகதிய 2306/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக இந்த திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

06

## அடுத்த வருடத்தில் உணவுப் பொருட்களின் விலை குறையும்

**வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ உறுதி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை அடுத்த வருடத்தில் பாரியளவு குறைக்க முடியும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சதொச விற்பனை நிலையங்களில் சில பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை சதொச விற்பனை நிலையங்களில் பல தடவைகள் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளமை தமது சொந்த நோக்கத்துக்காக அல்ல என்றும் வேலைத் திட்டம் சிறந்தது என்றால் அதனை முன்னெடுத்துச் செல்வதே தமது நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்:

அரசாங்கமானது ஒரு கிழமைக்கு போதுமான அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மிக அதிகமாக கொள்வனவு செய்யப்பட்டே சதொசவுக்கு வழங்கப்படுகிறது. அப்போது கொள்வனவு செய்யப்படும் விலையைப் பொறுத்தே நாம் நுகர்வோருக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க முடிகிறது.

06

## அரச ஊழியர்கள் 1,150 பேருக்கு 5 வருட ஊதியமில்லா விடுமுறை



அரச துறை ஊழியர்களுக்கு சம்பளமின்றி ஐந்தாண்டு விடுமுறை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 1,150 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 25,000 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.



இங்கிலாந்திலிருந்து வருகைதந்துள்ள ஓம் சரவணபவ சுவாமிகள் கொழும்பு, புதுச்செட்டித் தெரு சத்திய சாய் பாபா மத்திய நிலையத்திற்கு வருகை தந்திருந்தார். சுவாமிகளை பிரதம அறங்காவலரும் தலைவருமான எஸ். என். உதயநாயகன் தலைமையில் நிர்வாக, முகாமைத்துவ குழுவினர் வரவேற்றனர். சுவாமிகள் பக்தர்களுக்கு அருளாசி வழங்குவதை காணலாம்.



**அரசியலமைப்பு பேரவைக்கு - தமிழ் எம்.பியை நியமிப்பதில் இழுபறி**

த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் கவலை

03



**தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் பின்னடைவு**

கடந்த 10 மாதங்களில் வீழ்ச்சி நிலை

03

இலங்கை மின்சார சபைக்கு

## அடுத்த ஆண்டில் புதிதாக ஆட்சேர்ப்பு கிடையாது

**அமைச்சர் கஞ்சன டுவிட்டரில் தெரிவிப்பு**



இலங்கை மின்சார சபையில் புதிய ஆட்சேர்ப்பு எதுவும் இடம்பெறாது என தெரிவித்துள்ள எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, மின்சார சபையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் 3.5 முதல் 3.7 பில்லியன் ரூபாய் வரை செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

06

## புதிய கொரோனா கட்டுப்பாடு குறித்து அரசாங்கம் ஆராய்வு

**டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு**




சீனாவில் புதிதாக கொரோனா பெருந்தொற்று பரவ ஆரம்பித்துள்ளதை தொடர்ந்து இலங்கையின் கொரோனா நிலைமை குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு எனினும் புதிய கட்டுப்பாடுகள் வழிமுறைகள் குறித்து விசேட சுற்றுநிரூபம் எதனையும் வெளியிடவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

பிரதிசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

06

## வாகன இலக்க தகடுகளில் ஜனவரி முதல் மாற்றம்

**மாகாண எழுத்துக்கள் இல்லாது போகிறது**



வாகன இலக்கத் தகடுகளில் உள்ள மாகாணத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்துகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் புதிய வாகனப் பதிவுகளின் போது அகற்றப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாகாணங்களுக்கு இடையில் வாகனங்களை விற்பதனாலோ அல்லது மாற்றுவதனாலோ இலக்கத் தகடுகளை மாற்றுவதற்கு வாகன உரிமையாளர்கள் பல்வேறு

06

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த

## கால்பந்து உலகின் ஜாம்பவான் பீலே மரணம்



பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே தனது 82 ஆவது வயதில் காலமானார். செப்டெம்பர் 2021 முதல் பெருங்குடல் புற்றுநோயுடன் போராடி

06

## SJBயின் தமிழ் பிரிவின் ஊடக பேச்சாளராக உமா

**சஜித் பிரேமதாசவினால் நியமிப்பு**



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ், அக்கட்சியின் தமிழ் பிரிவு ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித்

06



**உறுதிப்படுத்திய தகவல் கிடைத்தால் மட்டுமே பாடசாலைகளில் தேடுதல்**

போதைப்பொருள் சோதனை குறித்து IGP உத்தரவு

03

மோசமான பொருளாதார வீழ்ச்சி கண்டிருந்த நிலையில்

## மோடியின் உதவிகளால் இலங்கை மீண்டெழுந்து வருவதே நிஜம்

**இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான்**

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் உதவியால், இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டு வருகிறது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

சிவகங்கை அருகே மதகுபட்டியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

06

## பாரத பிரதமர் மோடியின் தாயார் 100 வயதில் மரணம்




**சிதைக்கு தீ மூட்டினார் மோடி**



இந்திய பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் மோடி உடல்நலக்குறைவு காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை (30) அதிகாலை நூறாவது வயதில் காலமானார். அவரது இறுதிச் சடங்கு அகமதாபாத்திலுள்ள அவரது கிராமத்தில்

06

# மலைச்சாரல்



# 15 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத பிலேக்வோட்டர் தோட்டப்பாதை

## மக்கள் அசௌகரியம்





**ஹற்றன் விசேட நிருபர்**

அம்பகமுவ பிரதேச சபைக்கு சொந்தமான கினிகத்தேனை பகதுலவ பிலேக்வோட்டர் தோட்டத்திற்கு செல்லும் பாதை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக குண்டும் குழியுமாக காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதியின் சீரற்ற தன்மை காரணமாக பாரிய கற்கள் தோன்றி நடந்து கூட செல்ல முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கினிகத்தேனை நாவலபிட்டி பிரதான பாதை இணைக்கும் பிலேக்வோட்டர் தோட்டத்திற்கு செல்லும் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக இந்த பாதை காணப்படுகின்றது.

இத்தோட்டத்தில் வாழும் சுமார் 500 மேற்பட்ட குடும்பங்கள் இந்த வீதியினையே பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதியினூடாகவே பிளெக்வோட்டர் தமிழ் வித்தியாலயம், மத்திய மாகாண நெசவுக் கைத்தொழில் நிலையம், அலங்கார மீன் உற்பத்தி நிலையம்,பிலேக்வோட்டர் மேல் கீழ் பிரிவு போன்றன காணப்படுகின்றன. நாளாந்தம் சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், தொழில்புரியும் ஊழியர்கள் ஆகிய அனைவரும் இவ்வீதியினையே பயன்படுத்தி வருகின்றனர். எனினும் இந்த வீதி உடைந்த நிலையில் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை பயன்படுத்தும் முச்சக்கரவண்டி சாரதிகள் நாளாந்த அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே பயணிக்கின்றனர். இதனால் தங்களுடைய வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆட்டோ சாரதிகள் முகம் கொடுப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி சீரின்மை காரணமாக கூலி வாகனங்கள் அதிக பணம் அறிவிடுவதாகவும் இதனால் சாதாரண மக்கள் பொருட்களை கொண்டு செல்வதற்கும் பயணிப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

சிறிது மழை பெய்தாலும் வீதியிலுள்ள குழிகளில் தண்ணீர் நிறைந்து வழிவதாகவும் பிலேக்வோட்டர் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் போது பாதணிகளை கழற்றிக்கொண்டு பாடசாலை சென்றே மீண்டும் அணிந்து கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதிக மழையின் போது வீதி நீரில் மூழ்குவதனால் அடிக்கடி பாடசாலைக்கு விடுமுறை வழங்கி பிறிதொரு நாளில் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியில் அவசரத்திற்கு ஒரு நோயாளியை கூட கொண்டு போக முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் தனி வாத்திய இசை பிரிவில் முதலாம் மற்றும் இரண்டாமிடங்களையும் தனி இசை போட்டி நிகழ்ச்சியில் மூன்றாமிடத்தையும் பெற்ற பண்டாரவளை கல்வி வலயத்துக் குட்பட்ட கலபிட்டகந்த தோட்டத்தைச் சேர்ந்த கலபிட்டகந்த தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள், போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் நெறியாள்கை செய்து வழிப்படுத்திய ஆசிரியை திருமதி.சரிதா சிவக்குமார் ஆகியோரை படத்தில் காணலாம்.
படம்: ஊவா சுழற்சி நிருபர்



கண்டி விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் கண்டி கிறிஸ்த நாதர் ஆலயப்பொறுப்புக்குரு அருட்பணி செல்டன் சமாதானம்,பாடசாலை அதிபர் சுஜீவக்குமார் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியதுடன் மாணவர்களின கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.
படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# நோர்வூட் நகரில் ஆயுர்வேத வைத்தியசாலை

பொகவந்தலாவை, நோர்வூட், மஸ்கெலியா வாழ் மக்கள் ஆயுர்வேத வைத்திய தேவைகளுக்காக தலவாக்கலை மற்றும் நாவலப்பிட்டிய நகரங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது.

மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு அமைவாக நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட நோர்வூட் நகரில் முதற்கட்டமாக ஆயுர்வேத வைத்திய சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதற்கான வைத்தியர் ஒருவரையும் பெற்றுக் கொடுத்துள்ளேன். அதனூடாக தற்போது மக்கள் இலவசமாக வைத்திய சேவைகளை பெற்று பயனடைகின்றனர் என்று நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச சபையின் கீழ் எனது ஆலோசனைக்கமைய, 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பொகவந்தலாவ நகரில் அமைக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை செவ்வாய்க்கிழமை (27) திறந்து வைக்கப்பட்டது. இதனூடாக பொகவந்தலாவ பிரதேசத்துக்கு உட்பட்ட 35 பிரிவுகளில் உள்ள மக்கள் இலவசமாக ஆயுர்வேத வைத்திய சேவையினை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும் என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வினால் நீர்நிலைகளுக்கு பாதிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை பிரதேசத்திலுள்ள பல ஆற்றங்கரைகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை பிரதேசத்தை ஊடறுத்து செல்லும் வளவை கங்கையின் இரு கரையோரங்களும் இந்நிலைமையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். வளவைகங்கை கரைகளின் இருமருங்கிலும் பாரிய குழிகள் ஏற்பட்டு ஆற்றின் கரைகள் விரிவடைந்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் ஓடும் பெலிஹூல் ஓயா, ஹிரிகட்டு ஓயா, ஹூலுஓயா போன்ற ஆறுகளின் நிலைமையும் இவ்வாறாகவே காணப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும் ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆறுகளில் வெள்ளப்பெருக்குகள் மாத்திரமின்றி மழையற்ற காலப்பகுதிகளிலும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, காடழிப்பு போன்ற சட்டவிரோத மனிதச் செயற்பாடுகளும் இவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்களுக்கு காரணமாக அமைவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





தலவாக்கலை நாமகள் தமிழ் வித்தியாலய பாடசாலை வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் விஸ்வநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, நுவரெலியா கல்வி வலயத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் மோகன்ராஜ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் பாடசாலை நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். பின்னர் அதிதிகளால் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.
படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்

# முச்சக்கரவண்டியில் மோதி குழந்தை பலி

## நாடகமாடிய சந்தேக நபர்கள் 4 வருடங்களின் பின்னர் கைது

பதுளை மாவட்டம் கஹட்டரூப்ப பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துமால கிராமத்தில் சிறுமியொருவர் பாரவூர்த்தியில் அடிபட்டு உயிரிழந்ததாக நாடகமாடிய நபரொருவரும் அவரது மகளும் நான்கு வருடங்களின் பின் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தேயிலை தோட்ட தொழிலாளியான தாயொருவர் தனது இரண்டு வயது பெண் குழந்தையை அழைத்துக்கொண்டு (2018.05.11) முத்துமால கிராமத்திலுள்ள தேயிலை தோட்டத்தில் கொழுந்து பறிக்க சென்றுள்ளார். தேயிலை தோட்டத்தின் உரிமையாளர் அந்த 2 வயது குழந்தையை தமது வீட்டில் வைத்துக்கொண்டு தாயை தேயிலை தோட்டத்திற்கு கொழுந்து பறிக்க அனுப்பியுள்ளார். இந்நிலையில் சந்தேக நபரான பெண் ஓட்டிச்சென்ற முச்சக்கரவண்டியில் குழந்தை மோதி உயிரிழந்துள்ளது. இதனால் அதிலிருந்து தப்பிக்க தகப்பனும் மகளும் சேர்ந்து குழந்தையை தூக்கி வந்து வீதியில் கிடத்தி குழந்தை தோட்டத்தில் கொழுந்து ஏற்றும் லொறியில் அடிபட்டு உயிரிழந்ததாக நாடகமாடினர். இந்நிலையில், விளையாடிக் கொண்டிருந்த குழந்தை வாகனத்தில் அடிபட்டு உயிரிழந்து விட்டதாக குழந்தையின் தாய்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தேயிலை கொழுந்து ஏற்றிவரும் லொறியிலேயே இரண்டு வயது பெண்குழந்தை அடிபட்டு உயிரிழந்து விட்டதாகவும் தோட்ட நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார். எனினும் குழந்தையின் பிரேத பரிசோதனை அறிக்கையில் குழந்தை பாரவூர்தியில் அடிபட்டு உயிரிழக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து லொறியின் சாரதி விடுதலை செய்யப்பட்டார்.

அதன்பின்னர் சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அந்த விசாரணைகள் பதுளை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினரிடம் 2021 டிசம்பர் மாதம் ஒப்படைக்கப்பட்டது. பதுளை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்யட்சகர் சுஜித் வெதமுல்ல வழிகாட்டலில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் முத்திக குணசேகர இணைந்து பதுளை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரியந்த சாமிந்த தலைமையில் கடந்த நான்கு வருடங்களாக முன்னெடுத்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்பிரகாரம், 78 வயதுடைய தந்தை ஒருவரும் 43 வயதுடைய மகளும் சந்தேகத்தின் பேரில் கடந்த 28ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர்கள் பல அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரான பெண் ஓட்டிச்சென்ற முச்சக்கரவண்டியில் குழந்தை மோதி உயிரிழந்துள்ளது. இந்நிலையில், தகப்பனும் மகளும் சேர்ந்து குழந்தையை தூக்கி வந்து வீதியில் கிடத்தி குழந்தை தோட்டத்தில் கொழுந்து ஏற்றும் லொறியில் அடிபட்டு உயிரிழந்ததாக நாடகமாடியதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அதனைத்தொடர்ந்து கைது செய்யப்பட்ட இருவரையும் பதுளை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (29) ஆஜர்படுத்தி இருவரையும் அடுத்தவருடம் ஜனவரி 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வெலிமடை வலயக் கல்வி பணிப்பாளராக நியமனம்

வெலிமடை வலயக் கல்வி பணிப்பாளராக பகினிகஹவையைச் சேர்ந்த ஸரீனா பேகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸரீனா பேகம் மொ/பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், அப்பாடசாலையில் ஆசிரியராக கடமை புரிந்து கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து பிபிலை வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்தார்.

பின்னர் கல்வி நிர்வாக சேவையில் தரம் உயர்வு பெற்று ஊவா மாகாண கல்வித் அமைச்சில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி நேற்றுமுன்தினம் (30) திகதி வெலிமடை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் பெற்றார். ஊவா மாகாண ஆளுனர் AJM. முஸம்மில் இவருக்கான நியமனக் கடிதத்தினை உத்தியோகபூர்வமாக ஊவா மாகாண கேற்போர் கூடத்தில் வைத்து கையளித்தார்.

# விலைகளைக் காட்சிப்படுத்தாத வியாபார உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

வியாபார நிலையங்களில் பொருட்களின் விலைகளைக் காட்சிப்படுத்தாத வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்டக் காரியாலய பிரதம அதிகாரி உதய நாமல்கம தெரிவித்தார்.

பலாங்கொட நகர வியாபார நிலையங்களில் நேற்று காரியாலய அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் பின் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போது அவர் இத்தகவலை தெரிவித்தார்.

குறிப்பாக இன்றைய நெருக்கடியான காலக்கட்டத்தில் பாண், முட்டை ஆகியவற்றின் விலைகளைக் காட்சிப்படுத்தாத வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இப்பிரதேசத்தில் பல வியாபார நிலையங்களைப் பரீட்சித்த போது சட்டத்தை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபார நிலையங்களில் பாணின் விலையை அதிகரித்தும் எடையை குறைத்தும் மற்றும் முட்டையின் விலை அதிகரித்து விற்பனை செய்த பல வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



பதுளை செஞ்சிலுவை சங்கத்தின் அனுசரணையில் பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஹொப்டன் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிகளின் சுகாதார விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் சுமார் ஐந்து இலட்சம் பெறுமதியான சுகாதார அணையாடைகளை (Sanitary Napkin) நேற்று முன்தினம் (29) வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வின்போது பாடசாலை அதிபர் வி.நிரோஷன், பாடசாலை சுகாதார மேம்பாட்டு குழுவினர், செஞ்சிலுவை சங்கத்தின் சேவையாளர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சுகாதார பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கினர்.
படம்: லுணுகல நிருபர்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 31 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



போலி வெளிநாட்டு முகவர் நிலையம் நடத்தி

## போலந்து, துருக்கி அனுப்புவதாக கூறி பண மோசடி செய்த தம்பதி

### திம்பிரிகஸ்யாய பகுதியில் கைது



கொழும்பு, திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் போலி வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் நடத்தி, போலாந்து மற்றும் துருக்கியில் வேலை வாய்ப்புகளை பெற்று தருவதாக கூறி இலட்சக்கணக்கில் பணத்தை மோசடி செய்த கணவன், மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் சிறப்பு விசாரணை பிரிவினர் இவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

மேல் படிப்புக்காக இளைஞர், யுவதிகளை தொழில் வாய்ப்புகளுடன் போலந்து, துருக்கி உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் போர்வையில் நடத்தப்பட்டு வந்துள்ள இந்த நிறுவனம் நபர்களிடம் தலா 5 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது சம்பந்தமாக வேலை வாய்ப்புப் பணியகத்தின் சிறப்பு விசாரணைப் பிரிவுக்கு 11 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதற்கு அமைய குறித்த இடத்தை சுற்றிவளைத்து

06

## நாடு முழுவதும் இன்று டெங்கு ஒழிப்பு திட்டம்

### பாடசாலை வளாகங்களுக்கு முன்னுரிமை

பாடசாலைகள் நாளை மறுதினம் 02 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப் படவுள்ளமையால் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சு அனைத்து பாடசாலை நிர்வாகங்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளது.

இதனையடுத்து பாடசாலை வளாகங்களை துப்பரவு செய்வதற்கான வேலைத்திட்டங்கள் பாடசாலை அதிபர்களினால் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 75,434 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

பல பிரதேசங்களில் டெங்கு நுளம்புகள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## மோடியின் தாயார் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இரங்கல்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் மோடியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

உங்கள் தாயாரின் மறைவு செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன். உங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள் என்றும் தனது டுவிட்டர் பதிவில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அன்பான தாயின் இழப்பிலும் இந்த துயரமான நேரத்திலும் எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினருடன் உள்ளதென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# சீனாவில் தீவிரமாகும் கொரோனா உலக சுகாதார அமைப்பு கவலை

### உலக நாடுகள் அனைத்தும் உஷார் நிலையில்

சீனாவில் உருமாறிய புதிய வகை கொரோனா பி.எப்.07 மிக வேகமாக பரவி வருவதற்கு உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கூறியதாவது:

சீனாவில் கொரோனா பரவலின் எழுச்சியால் உலக சுகாதார அமைப்பு கவலையடைந்து உள்ளது. சீனாவில் நோய்த் தொற்று பரவலை கருத்தில் கொண்டு சில நாடுகள் அறிமுகப்படுத்தியுள்ள கட்டுப்பாடுகள் புரிந்து கொள்ளக் கூடியது.

சீனாவில் பரவி வரும் கொரோனா தொற்று குறித்து விளக்கம் அளிக்க அந்நாடு முன்வர வேண்டும். இது குறித்தான விரிவான தகவல்கள் எங்களுக்கு தேவை. நோய்த்தொற்றை தடுக்கும் வகையில் தொடர்ந்து கண்காணிக்கவும் தடுப்பூசி போடவும் சீனாவை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறோம். மருத்துவ பராமரிப்பு அதன் சுகாதார அமைப்பை பாதுகாப்பதற்கான எங்கள் ஆதரவை நாங்கள் சீனாவுக்கு தொடர்ந்து அளித்து வருகிறோம் என அவர் கூறினார்.

சீனாவில் கொரோனாவால் பாதிப்படைந்தவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அங்குள்ள மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. கொரோனாவால் தினமும் ஏராளமானோர் பலியாகி வருவதாகவும்

06



## அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் எம்.பியை நியமிப்பதில் இழுபறி

### த.மு.கூ.தலைவர் மனோ கணேசன் கவலை



அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் தொடர்ந்தும் இழுபறிநிலை நிலவுவதாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவைக்கு 7 பாராளுமன்ற உறுப்பினர்களும், 3 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களில் தற்போது 5 சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், எஞ்சிய ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்மொழிந்ததுடன், தமிழ்கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன.

இதற்கு உத்தர லங்கா சபாகய கட்சி எதிர்ப்பு வெளியிட்டதை அடுத்து, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் நியமனமானது இழுபறி நிலையில் உள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தர்மலிங்கம் சித்தார்த்தனின் நியமனத்திற்கு தொடர்ந்தும் அழுத்தம் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பு பேரவையில் உள்வாங்கப்படவுள்ள மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களில், மலையக இந்திய வம்சாவளி தமிழர் சார்பில் பிரதாப் ராமானுஜத்தின் பெயரை பரிந்துரைத்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

## தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் பின்னடைவு

### கடந்த 10 மாதங்களில் வீழ்ச்சிநிலை



நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் 10 மாதங்களில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதன்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த தேயிலை உற்பத்தி 258.9 மில்லியன் கிலோகிராம் எனவும், இந்த ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த தேயிலை உற்பத்தி 211.1 மில்லியன் கிலோகிராம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த 2021ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த இறப்பர் உற்பத்தி 66.3 மில்லியன் கிலோகிராம் எனவும், இந்த ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த இறப்பர் உற்பத்தி 59.2 மில்லியன் கிலோகிராம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, கடந்த 2021ம் ஆண்டில்

06

## உறுதிப்படுத்திய தகவல் கிடைத்தால் மட்டுமே பாடசாலைகளில் தேடுதல்

### போதைப்பொருள் சோதனை குறித்து IGP உத்தரவு



பாடசாலைகளில் போதைப்பொருள் புழக்கம் தொடர்பாக சரி பார்க்கப்பட்ட தகவல்கள் கிடைத்தால் மாத்திரமே சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

உறுதிப்படுத்திய தகவல்களைப் பெறாமல் பாடசாலைகளில் சோதனைகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சில பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களால் போதைப்பொருள்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதாக வெளியான தகவலையடுத்து, அண்மைய வாரங்களாக பாடசாலைகளை அண்டிய பகுதிகளிலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்குள்ளும் சோதனைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

பொலிஸாரின் கூற்றுப் படி, சில குழுக்கள்

06

கடற்றொழில் கூட்டுத்தாபனம்

## இலாபமீட்டும் நிறுவனமாக நவீன வலையமைப்புடன் உருவாக்கப்படும்

### இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த



கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நோக்கு, இலாபம் பெறுவது மாத்திரமல்ல நுகர்வோருக்கு சலுகை விலையில் தரமான போஷாக்கான மீன்களை பெற்றுக் கொடுப்பதுடன் சந்தையில் மீனின் விலையை நிலையாக பேணுவதுமாகுமென கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த த சில்வா தெரிவித்தார்.

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் அமைக்கப்பட்டுள்ள நவீன மெகா ஸ்டோர் நவீன கடைகளின் வலையமைப்பின் மினுவாங்கொடை கிளையை திறந்து வைக்கும் போதே கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த இவ்வாறு தெரிவித்தார். நவீன விற்பனை வலையமைப்பை உருவாக்கி தற்போது காணப்படும் கடைகளை நவீனமயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாக இராஜாங்க அமைச்சர் இங்கு தெரிவித்தார். அத்துடன் மீன்பிடி கூட்டுத்தாபனத்தை விரைவில் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

06

### அமெ.டொலர்களுக்கு வீடுகள் விற்பனை

## 2022 ஆண்டின் இலக்கு பூர்த்தி 05 இலட்சம் டொ. தாண்டியது

### நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடுத்தர வருமான வீடுகள் டொலருக்கு விற்கப்படும் திட்டத்தின் கீழ் 5 00,000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் வருமானம் ஈட்டியுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, 5 02,170.93 டொலர்கள்இதுவரை ஈட்டியுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது உள்ளூர் பெறுமதியில் 181.2 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு டொலர்களில் வீடுகள் விற்கப்பட்டு எதிர்பார்க்கப்படும் வருமானம் 05 இலட்சம் டொலர்கள். ஆண்டு நிறைவுக்குள் அந்த இலக்கை தாண்ட முடிந்ததாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நாட்டின் டொலர் நெருக்கடிக்கு தீர்வாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட நடுத்தர வருமான வீடுகளை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டு இலங்கை தொழிலாளர்கள் கொள்வனவு செய்வதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, முதலாவது வீடு கடந்த செப்டம்பர் மாதம் விற்கப்பட்டது. துபாயில் வசிக்கும் இலங்கையர் ஒருவரால் அவ் வீடு கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது 11 வீடுகள் டொலர்களுக்கு விற்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அந்த வீடுகள் பன்னிபிட்டிய, வீரமாவத்தையில் வியத்புர வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ளது. தற்போது

06

அரசியல் தீர்வை காண்பதற்கான பயணத்தில்

## தமிழ் அரசியல்வாதிகள் ஜனாதிபதியுடன் கைகோர்க்க வேண்டும் : விஜேயதாஸ ராஜபக்ச



தமி ழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்துவிட்டு தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும், அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் ஜனாதிபதியுடன் அவர்கள் கைகோர்க்க வேண்டும் எனவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அவசரப்பட்டு அரசியல் தீர்வைக் கொண்டுவர முயலவில்லை. தேசிய இனப்பிரச்சினையால் தமிழர்கள் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டே அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் அவர் இறங்கியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்துவிட்டு தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்த வேண்டும்.

அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் ஜனாதிபதியுடன் அவர்கள் கைகோர்க்க வேண்டும். நல்லிணக்கம் தொடர்பான பல நிறுவனங்கள் எனது அமைச்சின் கீழ் உள்ளன. அந்த நிறுவனங்கள் தங்கள் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கின்றன" என்றார்.

## வலம்புரி கவிதா வட்ட 83 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 83 ஆவது கவியரங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (06) காலை 9 மணிக்கு கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கவிஞர் கவிநேசன் நவாஸ் தலைமையில் இடம்பெறும் இக் கவியரங்கில் நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர், இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழ கணேஷ் (பொருளாளர்) 071 756 3646 அல்லது நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 071 4929 642 வட்ஸ்அப் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 16ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 06

## குறள் தரும் சிந்தனை



விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்

பழமையான நண்பர்கள் தவறு செய்த போதிலும், அவர்களிடம் தமக்குள்ள அன்பை நீக்கிக் கொள்ளாதவர்களைப் பகைவரும் விரும்பிப் பாராட்டுவார்கள்.

# நாளை பிறக்கின்ற புதிய ஆண்டில் மக்கள் கொண்டுள்ள பொறுப்பு!

புதிய ஆண்டான 2023 ஆம் ஆண்டில் உலகம் நாளை காலடி வைக்கின்றது. உலக மக்கள் அனைவருக்கும் புதிய ஆண்டில் புதிய நம்பிக்கைகள் எழுவது இயல்பு ஆகும். புதிய ஆண்டில் வாழ்க்கையில் சுபிட்சம் தோன்ற மாட்டாதா? இன்றைய துன்பதுயரங்கள் நீங்க மாட்டாதா? பொருளாதாரச் சிக்கல்கள் அகல மாட்டாதா? இவ்வாறெல்லாம் ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பது வழமையாகும்.

நாளை பிறக்கப் போகின்ற புதிய ஆண்டு தொடர்பாக, முன்னைய காலங்களைப் பார்க்கிலும் தற்போது எதிர்பார்ப்புகள் சற்று அதிகமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமெதுவும் கிடையாது. ஏனென்றால் உலக வரலாற்றில் கடந்த மூன்று வருட காலமாக மக்கள் அனுபவித்த துன்பதுயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. உயிரிழப்புகள், வறுமை, தொழில்வாய்ப்பின்மை என்றெல்லாம் உலகநாடுகள் அனைத்திலும் மக்கள் விபரிக்க முடியாத துன்பங்களை கடந்த சுமார் மூன்று வருடங்களாக அனுபவித்து வருகின்றனர் என்பது நம் எல்லோருக்குமே நன்கு தெரிந்திருக்கும்.

உலக நாடுகள் அனைத்திலுமே பொருளாதார நிலைமை தற்போது சீராக இல்லை. செல்வந்த நாடுகளும் கூட தற்போது பொருளாதாரத்தில் வீழ்ச்சி நிலைமையிலேயே உள்ளன என்பதுதான் உண்மை. இதற்கான காரணம் உலகப்பெருந்தொற்றான கொவிட் வைரஸின் பரவல் ஆகும். சீனாவில் முதன் முதலில் தோன்றிய கொரோனா வைரஸ் தொற்று அதன் பின்னர் படிப்படியாக உலகநாடுகள் எங்குமே பரவி ஏற்படுத்திய பாதிப்புகள் ஏராளம்.

மில்லியன்கணக்கான மக்கள் உயிரிழந்து போனது ஒருபுறமிருக்க, உலகின் பொருளாதாரமே அதலபாதாளத்துக்குத் தள்ளப்பட்டது. தனிநபர் பொருளாதாரம் மாத்திரமன்றி, நாடுகளின் தேசிய வருமானமே வீழ்ச்சிக்கு உள்ளானது. கொவிட் தொற்றின் பரவுதலில் இருந்து உலகம் படிப்படியாக மீண்டெழுந்து கொண்டு வரும்போதுதான் பொருளாதார நெருக்கடிகளும் உலக நாடுகளில் தோற்றம் பெற்றன. பொருளாதார வீழ்ச்சிக்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

நாளை கடந்து செல்லவிருக்கின்ற 2022 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் அனுபவித்த துன்பதுயரங்கள் மிகவும் அதிகமாகும். அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலையேற்றம், சமையல் எரிவாயு மற்றும் திரவ எரிபொருட்களின் விலையேற்றம் என்றெல்லாம் பலவிதமான நெருக்கடிகள் எம்மைச் சூழ்ந்து கொண்டதால், கடந்த ஒரு வருட காலமாக எம்மைத் தொடர்ந்த துன்பங்கள் அதிகம்.

சுயதொழில் புரிவோர் பலர் வறுமைக்குள் தள்ளப்பட்டனர். தனியார் நிறுவனங்கள் ஏராளமானவை முடங்கிப் போய் விட்டன. அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்த வேதனம் கிரமமாக வழங்கப்பட்டு வந்த போதிலும், அவ்வேதனத்தை வழங்குவதற்கு அரசாங்கம் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆனாலும் பொருளாதார நெருக்கடி காரணமாக பொதுமக்களுக்கான சேவைகளை அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவில்லை.

கடந்து செல்லும் வருடத்தில் பொருளாதார நெருக்கடியை மாத்திரமன்றி, அரசியல் நெருக்கடியையும் இலங்கை சந்திக்க வேண்டியிருந்தது. அரசியல் நெருக்கடி உருவெடுப்பதற்குக் காரணம் பொருளாதார நெருக்கடிதான் என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை. எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வு, போக்குவரத்து முடக்கம் போன்ற பல்வேறான நெருக்கடிகளால் மக்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

அதன் காரணமாக அரசுத்தலைவர் தனது பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. நாட்டின் அரசியல் நெருக்கடி நிலைமை நீடித்துச் சென்ற வேளையில், கொந்தளிப்பு நிலைமையை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு நாட்டின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்பதற்கு பலரும் தயங்கிக் கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதிப் பதவியை துணிச்சலுடன் பொறுப்பேற்றவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். நாட்டின் அரசியல் சாசனத்துக்கு அமைவான விதத்தில் அவர் பாராளுமன்றத்தில் அதிகப்படியான ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டவுடன் நாட்டின் அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்தது ஒருபுறமிருக்க, பொருளாதார நெருக்கடியும் படிப்படியாக சீரடைந்து வரத் தொடங்கியது. கொந்தளிப்பு நிலைமையில் காணப்பட்ட எமது நாட்டை தணிவு நிலைமைக்குக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்ற திட்டங்களை உலக நாடுகள் பாராட்டுகின்றன. எமது நாட்டுக்கு இன்று அவசியமாக உள்ளது பொருளாதார மீட்சியாகும். அதற்காக அரசாங்கம் மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதே அனைவரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழ்நாடு அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற கனடா தமிழாழி விருது வழங்கும் விழா

தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், கனடாவில் இயங்கும் தமிழாழி நிறுவனத்தின் பத்தாவது தமிழாழி விருது விழா 28 .12. 2022 அன்று மிகச் சிறப்பாக நிறைவுற்றது.

தமிழ்நாட்டில் இய ங்கும் புகழ்பூத்த 30 இற்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் இணைந்து கனடா தமிழாழியின் விருது விழாவை மிகச் சிறப்பாக நடத்தி முடித்துள்ளன.

தமிழ்நாடு அன்பின் சங்கமம், அருந்தமிழ்ச் சங்கம், துளிர் அமைப்பு ஆகிய அமைப்பினர் இதனை நெறிப்படுத்தி வழிநடத்தினர்.

இவ்விழாவில் தமிழ்நாட்டு அறிஞர்கள், கலைஞர்கள், பெருமக்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக நடத்திய விழாக்களில் தமிழாழி விருது விழா பிரதானமானது ஆகும். கனடாவில் தமிழாழி ஒன்பது வருடங்களாக விருது விழாவை சிறப்பாக நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது .

இவ்விழாவில் 60 இற்கும் மேற்பட்ட கலைஞர்களுக்கான விருதுகள், 40 இற்கும் மேற்பட்ட கலைஞருக்கான பாராட்டு பட்டயங்கள் என மொத்தமாக 100 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள், மாணவர்கள் உட்பட பலருக்கும் விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் தலைமை ஏற்பதற்காக கனடா தமிழாழி பேரவைத் தலைவர் பாட்டருவி தமிழ்மணி க. உயிரவன் கனடாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வருகை தந்து கலந்து கொண்டார்.

இவ்விழாவுக்கு கனடாவில் இருந்து சென்னை வரும்போது தமிழ்மணி பாட்டருவி தமிழ்நாட்டில் உள்ள 100 கோயில்களுக்கு பறக்கும் விமானத்தில் பாடல்களை எழுதி சாதனை புரிந்தார்.

இந்த நிகழ்வை புதுச்சேரியில் இயங்கும் இந்திய உலக சாதனையாளர் பதிவு நிறுவனம் கண்காணித்தது. உலக சாதனையாக வெங்கடேசன் அவர்கள் சாதனைக்கான சான்றிதழ்களையும் விருதுகளையும் வழங்கினார்.

பறக்கும் விமானத்தில் பிறந்த பாடல்கள் என்ற சாதனைப் புத்தகத்தின் அட்டைப் படம் இவ்விழாவில் வெளியிடப்பட்டது.

அத்தோடு தமிழாழியின் தமிழ்நாட்டு இணைப்பாளர் தங்க தினேசு அவரின் பாட்டியின் சுருக்குப் பை என்ற சிறுகதை நூலும் அத்துடன் வானவில் தீட்டிய வண்ணக் கோலங்கள் என்ற குழந்தைகளின் கதை தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டன.

இவ்விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழ் சான்றோர் விருது, தமிழ் சாதனையாளர் விருது, விளையாட்டு விருது, கலை விருது உட்பட இளம் படைப்பாளிகளுக்கான விருது, தமிழ்நாடு தொலைக் காட்சி கலைஞருக்கான விருதுகள் வழங்கப்பட்டன.










தமிழ்நாட்டில் இயங்கும் 11 தமிழ் அமைப்புகளும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இவ்விழாவில் இலங்கையைச் சேர்ந்த கந்தசாமி வணக்கம் தெரிவித்து, மகிமாவின் தமிழ்த்தாய் வாழ்த்துடன், தமிழாழி பேரவைத் துணைத் தலைவர் ஜோ. கேத்ரின் மெட்டிலா வரவேற்புரை வழங்கினார்.

பேரவைத் தலைவர் க.உயிரவன் தலைமையுரை வழங்கினார். பண்ணைத் தமிழ் சங்கத்தின் அமைப்பாளர் கவிக்கோ துரை வசந்தராசன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். தமிழ்ச்செம்மல். எழுத்தாளர், கவிஞர் கவரிசு மகேசு முன்னிலை விருந்தினராக பங்கேற்றார். வைரவரி வானரசன், உரு. அசோகன், இரா உமா பாரதி, செ.வெங்கடேசன், க.சரவணன் ,சு.சுப்புராஜூ, ந.பாப்ஜி சந்தர்,பிரதீபன், சந்திரசேகர், புலவர் இளங்குமரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விழாவில் புல்புல் இசையை கே. ஜி. ஜவஹர், கிராமியக் கலையை அ.ஷாஜகான் வழங்கினர். பரதநாட்டிய நிகழ்வு மரியா பிரகாஷ் தலைமையிலும், கூத்துப் பட்டறை முத்துசாமி ஒருங்கிணைப்போடும் நடைபெற்றன. அத்துடன் மேலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழாழியின் கடந்து வந்த பாதையை பற்றி தமிழ்நாட்டு இணைப்பாளர் தங்க தினேசு சிறப்பாக உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து தமிழாழி தொலைக் காட்சியில் பங்குபற்றிய தமிழ்நாட்டு சிறுவர்களுக்கும் விருதுகளும், பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன .

அதைத் தொடர்ந்து தமிழாழி தொலைகாட்சியின் தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிறைவாக பேரவையின் துணைச் செயலாளர் அன்புச்செல்வி சுப்புராஜூ நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியை முத்து விஜயன் மற்றும் கரூர் சுபாஷினி தொகுத்து வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பல அமைப்புக்கள் பங்கேற்றிருந்தன. தமிழாழி பேரவைத் தலைவர் தமிழ்மணி.க.உயிரவன் அவர்களுக்கு தமிழ்ப்பணி செம்மல், சேவா. வாழ்நாள் சாதனையாளர் , திருவள்ளுவர் வாழ்நாள் சாதனையாளர்,தமிழ் மாமணி , சொல்லின் செல்வர், அருந்தமிழ்ச்சுடர், தமிழ்புதையல், தமிழ்ச்சிற்பி, இலக்கிய மாமணி, தமிழ் கொண்டல், திருக்குறள் கோமான், வெள்ளித்தாரகை என பல விருதுகளை தமிழ்நாட்டில் வழங்கி தமிழ்நாட்டு மக்கள் கௌரவித்தனர்.

# முடிவில்லாத துயரத்தில் ஆப்கானிஸ்தான் பெண்கள்: உயர்கல்விக்கான தடையும், மனிதஉரிமை மீறல்களும்!

ஆப்கானிஸ்தான் பெண்கள் மீதான அடக்குமுறையின் தொடர்ச்சியாகப் பெண்களின் கல்லூரிப் படிப்பை தலிபான்கள் தடை செய்ததோடு, பெண்கள் பயிலும் பல்கலைக்கழகங்களை மூடவும் தற்போது உத்தரவிட்டுள்ளனர். நீண்ட காலமாக அவலத்தோடு வாழும் மக்களின் துயரங்களுக்கு முடிவு கானல் நீராகவே புலப்படுகிறது.

அமெரிக்கப் படை விலகலின் பின்னர் ஆப்கானில் இருபாலர் பயிலும் கல்வி நிலையங்களில் திரைச்சீலை கொண்டு மாணவர்களையும் மாணவிகளையும் பிரிக்க வேண்டும் என அந்நாட்டு தலிபான் அரசு கடந்த வருடம் கூறியிருந்தது.

தற்போது ஆப்கானிய உயர்கல்வித்துறை அமைச்சகம் மற்றொரு அதிர்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி இனிமேல் பெண்கள் பல்கலைக்கழகங்களில் பயில முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பெண்களுக்கு இருந்த தடை காரணமாக அலுவலகங்களில் அவர்கள் பணியிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த புதிய தடை உத்தரவு மூலம் பெண்களுக்கு கடும் நெருக்கடி ஏற்படுமென சர்வதேச ஆர்வலர்கள் கூறியுள்ளனர். இதனையடுத்து காபுலில் மாணவிகள் கண்ணீருடன் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றன.

பொது இடங்களுக்கு ஆண் துணையின்றி செல்லக் கூடாது என்பதுடன் உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட இடங்களுக்கு செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டது.

இக்கட்டான இச்சூழலில் தலைநகர் காபூலில் கறுப்பு உடையும் பர்தாவும் அணிந்திருந்த பெண்கள் தலிபான்கள் முன்னிலையில் தமது கல்வி, பணி மற்றும் அரசியல் பங்கேற்பு உரிமைகளுக்காகப் பதாகைகளை ஏந்தி அறவழிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தக் காணொலி சமூகவலைத்தளங்களில் வைரலானது. ஆப்கானின் வேறு சில பகுதிகளிலும் ஈரான் உள்ளிட்ட நாடுகளிலும் ஆப்கான் பெண்கள் தலிபான்களுக்கு எதிராகப் போராடிய செய்திகளும் வெளியாகின.

உலக வல்லாதிக்க நாடுகள் கைவிட்டு விட்ட நிலையில், ஆப்கான் பெண்களே தமது உரிமைகளுக்காக தலிபான்களை எதிர்த்துப் போராடத் தொடங்கியிருப்பது கவனத்தைப் பெறுகிறது.

ஆப்கானில் பெண்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பல பெண்களை தலிபான்கள் கைது செய்துள்ளனர். இதன்போது மூன்று ஊடகவியலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தடை அறிவிக்கப்பட்ட பின்னர் நூற்றுக்கணக்கான பெண்கள் பல்கலைக்கழகம் நுழைவதை காவலர்கள் தடுத்தனர். தலிபான்கள் கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து பெண்களின் கல்வி மீது விதித்து வரும் கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியாகவே இந்தத் தடை வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த வாரம் காபுல் வீதிகளில் ஹிஜாப் அணிந்த பல பெண்கள் இந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோசங்களை எழுப்பியும், பதாகைகளை ஏந்தியும் பேரணி செல்லும் காட்சி சமூக ஊடகத்தில் வெளியானது.

இதன்போது தாம் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாக பல பெண்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கப் படை விலகலின் தோல்வி:

2001 அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு தலிபான்களை ஒடுக்குவதற்காக ஆப்கானில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் பாதுகாப்புப் படைகள் கடந்த 2021 ஜூலை மாதத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டு, தற்போது தலிபான்கள் ஆப்கானை மீண்டும் ஆளுகின்றனர்.



கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானில் நிலவிவந்த ஜனநாயக ஆட்சியில் ஒப்பீட்டளவில் பெண்களுக்குச் சுதந்திரம் இருந்தது. இலட்சக்கணக்கான பெண்கள் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வியைப் பெற்றனர். திரைப்பட இயக்குநர்கள் உருவாகினர்.

மேயர் உள்ளிட்ட அரசியல் பதவிகளுக்கும் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீண்டும் ஆட்சியைப் பிடித்த தலிபான்கள் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றனர்.

ஆனால், களத்திலிருந்து வரும் செய்திகள் அதற்கு நேரெதிராக உள்ளன. அலுவலகப் பணிகளில் இருந்த பெண்களை நீக்கிவிட்டு அந்தப் பணியிடங்களில் ஆண்களை நியமிக்க தலிபான்கள் உத்தரவிட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

### அடிப்படை உரிமைகள் பறிப்பு:

கடந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் பல்வேறு தரப்பிலும் அந்நாட்டு மக்களின் பல அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன.

குறிப்பாக பெண்கள் மீது பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதிகாரத்தைக் கைப்பற்றியபோது, சர்வதேச ஆதரவைப் பெற தலிபான்கள் ஆரம்பத்தில் மிதமான பிம்பத்தை முன்வைக்க முயன்றனர்.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதாக சர்வதேச சமூகத்திற்கு பல வாக்குறுதிகளை அளித்திருந்த நிலையில், அதற்கு நேர்மாறாகச் செய்து, அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைத் திட்டமிட்டு ஒடுக்கி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் பெண்கள், குழந்தைகளின் நிலை குறித்துக் கவலை அளிப்பதாக உலக நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

பல்கலைகழகங்களை தாலிபான் அரசு மூடியதையிட்டு கதறியழுத மாணவிகள், இதனை “பெருந்தவறு” என்று தெரிவித்து போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் உயர் கல்வி பயில அந்நாட்டு தலிபான்கள் அரசு இடைக்கால தடை விதித்துள்ள நிலையில், வகுப்பறையில் பெண்கள் கதறி அழும் வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றன.

தலிபான் அரசின் இந்த உத்தரவை எதிர்த்து மாணவிகளுக்கு ஆதரவாக மாணவர்களும் போராட்டக் களத்தில் குதித்துள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகள் வரை அமெரிக்காவின் பிடியிலிருந்த ஆப்கானிஸ்தான் சமீபத்தில் அந்நாட்டை தலிபன்களிடத்தில் ஒப்படைத்து விட்டு வெளியேறிய பின்னர் பல்கலைகழகங்ககளை மூடிய தலிபான்களின் செயலை முழு உலகமே கண்டித்துள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# சென்னையில் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் ஒன்பதாம் ஆண்டு மாநாடு

**கடந்த எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு 2023 ஆண்டு ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது.**




அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் தமிழ் பாரம்பரிய கலை, கலாசார, உணவு, உடை போன்ற நிகழ்வுகள் மக்களை விட்டு மறந்து விடாமல் இருக்கவும், தமிழ் பேச்சுமொழி சிதறாமல் இருக்கவும் பாடுபடும் நோக்கத்துடன் இந்நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள சட்டமன்ற, பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள், மாநில மற்றும் மத்திய அமைச்சர்கள், துணைசபாநாயகர்கள், துணைவேந்தர்கள், மேயர்கள், சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.



"தமிழன் தொழில் வழங்குபவனாக இருக்க வேண்டும். வேலை தேடுபவனாக இருக்கக் கூடாது என்ற கூற்றுக்கு இணங்க இந்நிகழ்வை நடத்தி வருகிறோம்.'வளரும் தமிழகம்' என்ற கண்காட்சி மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை புலம்பெயர்ந்த தமிழர்களிடம் சந்தைப்படுத்தி, தொழில் முன்னேற்றத்தை உருவாக்கவும் பல்வேறு நாடுகளில் உள்ள அரசு வர்த்தக ஆணையங்களுடன் இணக்கமாக செயல்பட்டு தொழில் வாய்ப்புகளை பெறவும் தொழில் வாய்ப்புகளை தேடுவோருக்கு இந்த நிகழ்வு பேருதவியாக இருக்கும்" என்று உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், எடிசன் திரை விருது குழுத் தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

## ஜனவரி 6, 7 ஆம் திகதிகளில் கோலாகலமாக நடைபெறும்; இலங்கை உட்பட பல்வேறு நாடுகளிலிருந்தும் பிரமுகர்கள் பங்கேற்பு














இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக மலேசிய நாட்டின் முதல் பெண் இணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, பாராளுமன்ற உறுப்பினர் Y.B. கேசவன், மனித வள மேம்பாட்டு துறை முன்னாள் அமைச்சர் டத்தோ ஸ்ரீ சரவணன் மற்றும் இலங்கையிலிருந்து வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும் ஓய்வு பெற்ற நீதியரசரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன், உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வீரகேசரி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் , தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வட அமெரிக்கா தமிழ்ச் சங்கத் தலைவர் பாலசுவாமிநாதன் மற்றும் டொக்டர் விஜய் ஜானகிராமன் சம்பந்தம், மொரீசியசிலிருந்து வினய் நாராயணன் போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

நிகழ்வின் இறுதியாக தென் இந்திய திரைத் துறையினர் கலந்து கொள்ளும் 15 ஆம் ஆண்டு எடிசன் திரை விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற உள்ளது. இந்நிகழ்விற்கு உலகத் தமிழ் தலைவர்களை வரவேற்கவும், கௌரவிக்கவும், தயாராக இருப்பதாக உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், எடிசன் திரை விருது குழு தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

# கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருதுகள் பெறும் படைப்பிலக்கியவாதிகள் முருகபூபதி, பாவண்ணன்

**கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் வழக்கமாக வருடா வருடம் வழங்கும் இயல்விருது கொவிட் தொற்று காரணமாக 2020 ஆம் வருடம் வழங்கப்படவில்லை. ஆகவே 2022 இல் இரண்டு இயல் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவை 2023 யூன் மாதம் கனடா ரொறொன்ரோவில் வழங்கப்படும்.**

இம்முறை இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றுள்ளவருமான எழுத்தாளர் லெட்சுமணன் முருகபூபதிக்கும், இந்திய எழுத்தாளரான பெங்களூரில் வதியும் பாவண்ணனுக்கும் இயல் விருது வழங்கப்படுகிறது.

### லெட்சுமணன் முருகபூபதி:

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 50 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் இலங்கையில் பிறந்த படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு வழங்குகிறது.

1972 இல் எழுத்தாளராக அறிமுகமான இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்தது. வீரகேசரி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் இவர் பணியாற்றியபோது, சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் – மாணவர் விழாவில் கலந்து கொண்டார்.

1987 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த இவர், தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, பேட்டி, பயண இலக்கியம் என எழுதி வெளியிட்டு வருகிறார். அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைத்துவரும் இவர், 2011 இல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாளராக செயல்பட்டார்.

அவுஸ்திரேலியாவில் 1988 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், 2004 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் ஆகியனவற்றின் ஆரம்ப உறுப்பினருமாவார்.

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் 13 யூலை 1951 இல் பிறந்த முருகபூபதி , விவேகானந்த வித்தியாலயத்தில் (தற்போது விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) தமது ஆரம்ப கல்வியை தொடங்கி பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும், (தற்போது கனகரத்தினம் மத்திய கல்லூரி) நீர்கொழும்பு அல்கிலால் மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

இவருடைய வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் 'ரஸஞானி' என்ற ஆவணப்படத்தை 2017 இல் மெல்பேர்ன் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியும், வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டனர்.

இவருடைய சிறுகதை தொகுதிகள் ஏழும், புதின, சிறுவர், பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரை தொகுதிகள் பதினாறும் வெளிவந்துள்ளன.

### இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:

- சுமையின் பங்காளிகள் – 1975 ஆம் ஆண்டு சிறந்த சிறுகதை தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.
- பறவைகள்_2002ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.
- அக்கினிக்குஞ்சு இணைய இதழ் 2018 இல் வழங்கிய வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருது.

### இதர விருதுகள்:

2002 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தினத்தின் போது விக்ரோரியா மாநில டெறபின் மாநகர சபை வழங்கிய சிறந்த பிரஜைக்கான விருது.

2011 ஆம் ஆண்டு விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார ஆணையத்தின் விருது.




முருகபூபதி

2022 Aust Tamil TV (Tamil Linguistics Award) விருது.

### பாவண்ணன் (இயற்பெயர் பலராமன் பாஸ்கரன்):

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் பாவண்ணன் அவர்களுக்கு வழங்குகிறது.

பாவண்ணன் 1980 களில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களின் தலைமுறையை சேர்ந்தவர். 'தீபம்' என்னும் இதழில் வெளிவந்த முதல் சிறுகதையை தொடர்ந்து சிற்றிதழ்களிலும், பெரிய



பாவண்ணன்

இதழ்களிலும் இவர் இன்றுவரை தொடர்ந்து எழுதுகிறார். தமிழ் சிறுகதைகளையும், தமிழில் வெளிவந்த பிறமொழிச் சிறுகதைகளையும் முன்வைத்து திண்ணை இணைய இதழில் 'எனக்குப் பிடித்த கதைகள்' என்னும் தலைப்பில் இவர் அந்தக் கதைகளில் காணப்பட்ட அழகியலையும் வாழ்வியலையும் இணைத்து புரிந்துகொள்ளும் விதமாக எழுதிய நூறு விமர்சனக் கட்டுரைகள் மிகப்பெரிய வாசக கவனத்தைப் பெற்றன.

ஐம்பது தமிழ்க் கவிஞர்களின் படைப்புகளை முன்வைத்து 'உயிரோசை' இணையதளத்தில் 'மனம்வரைந்த ஓவியம்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை.

பாவண்ணன், வளவனூர் என்னும் சிற்றூரில் 1958 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 இல் பிறந்தார். பள்ளிக் கல்வியை வளவனூரிலும் புகுமுக வகுப்பை விழுப்புரம் அரசுக் கல்லூரியிலும், பட்டப் படிப்பை புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரியிலும் படித்து தேறினார். கோட்டப் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

இவருடைய கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதை தொகுதிகள் 21 , நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரை தொகுப்புகள் 34 , சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் (எல்லாமாக 99 நூல்கள் ) இதுவரை வெளியாகியுள்ளன.

### இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:

- புதுச்சேரி அரசு சிறந்த நாவல் விருது – 1987
- இலக்கியச் சிந்தனை சிறந்த நாவல் விருது – 1995.
- கதா அமைப்பு சிறந்த சிறுகதை விருது – 1995.
- சாகித்திய அகாதெமி சிறந்த மொழிபெர்ப்பு விருது – 2005
- தமிழக அரசு சிறந்த குழந்தை இலக்கிய விருது – 2009
- சுஜாதா – உயிர்மை அறக்கட்டளை சிறுகதை தொகுப்பு விருது – 2015
- என்.சி.பி.எச் சிறந்த கட்டுரை தொகுதி விருது – 2015
- இந்திய அமெரிக்க வாசகர் வாழ்நாள் சாதனை விருது – 2018
- விளக்கு அமைப்பு புதுமைப்பித்தன் விருது – 2019
- எம்.வி. வெங்கட்ராம் நூற்றாண்டு நினைவு விருது – 2021

# கலாசார நிலைய முகாமைத்துவ சபையின் செயலாளராக தெரிவு

**சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய முகாமைத்துவ சபையின் செயலாளராக கலைஞர் அஸ்வான் ஷக்காப் மௌலானா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இக்கலாசார மத்திய நிலைய கட்டடத் தொகுதி விரைவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப் படவுள்ள நிலையில், பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் முன்னிலையில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் மேற்படி மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியுமான யூ.கே.எம்.றிம்ஸான் தலைமையில் இடம்பெற்ற இம் முகாமைத்துவ சபையின் அங்குரார்ப்பண நிகழ்வின்போதே அவர் இப்பதவிக்கு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.**

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்ற அஸ்வான் மௌலானா, நாடகக் கலை பட்டறைக்கான வளவாளராகவும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.



நாடக எழுத்தாக்கம், தயாரிப்பு மற்றும் மேடை நாடகம் என்பவற்றில் விற்பன்னராகத் திகழும் இவர், பல்வேறு விருதுகளை பெற்றிருப்பதுடன் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

கலை, கலாசார மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளில் முன்னின்று பங்காற்றி வருகின்ற இவர் முஸ்லிம் சமய, கலாசார அமைச்சின் இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை விஷேட நிருபர்...

# திருக்கோவிலுக்கு வருகை தந்த உலகப்புகழ் ஓவியர் பத்மவாசன்

**தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.**

திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரனின் வழிகாட்டலின் கீழ் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் விசேட கருத்தரங்கை நடத்தினார். அத்துடன் 'ஓவியத்தினுாடாக இறைவனை காணலாம்', 'நாவலர் பெருமான் வாழ்வும் வாக்கும்', 'சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கைச் சரித்திரம்' போன்ற விடயங்களை உள்ளடக்கிய வகையில் ஓவியம் வரைதல் நிகழ்வூடாக மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேச கலாசார நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் க.சதிசேகரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வண்ணக்கர் வ.ஜெயந்தன், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கே.ஜெயராஜ், திருக்கோவில் பிரதேச செயலக முன்னாள் கிராமசேவை நிருவாக உத்தியோகத்தர் கண. இராஜரெத்தினம், திருஞானவாணி அறநெறி பாடசாலை தலைவர் ஆ.கணேசமூர்த்தி,எழுத்தாளர் சு.கார்த்திகேசு மற்றும் திருக்கோவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





காரைதீவு குறூப் நிருபர்...

நகர அபிவிருத்தி அதிகார சபையினால்

# 2022 இல் ஆரம்பித்த 175 திட்டங்கள் இதுவரை பூர்த்தி

## எஞ்சியுள்ள திட்டங்களை 2023 க்குள் நிறைவு செய்யுமாறு அமைச்சர் பிரசன்ன பணிப்பு

திறைசேரியின் 10,600 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் கீழ் இந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்ட 215 திட்டங்களில் சுமார் 175 திட்டங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி மேலும் 40 திட்டங்களின் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வருடம் நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார சூழல் காரணமாக அந்தத் திட்டங்களை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆனால் அந்த 40 திட்டங்களின் பணிகளை அடுத்த ஆண்டுக்குள் முடிக்க விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடமிருந்து ஏற்கனவே இதற்கான அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நூறு நகரங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் 117 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகர்ப்புற மையங்களை உள்ளடக்கியதுடன் அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 116 நகரங்களில் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.



110 நகரங்களின் பணிகள் தற்போது முழுமையாக முடிவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பணிகள் நிறைவடைந்த 110 நகரங்களில் நடைபாதைகள், நகர்ப்புற திறந்தவெளி நிலத்தில் வடிகால் அமைப்புகள், பயணிகள் தங்குமிடங்கள் மற்றும் சுகாதார வசதிகள் போன்றவை அடிப்படை தேவைகளாக பொது மக்களுக்காக உருவாக்கத் தெரிவித்துள்ளது. ஒன்பது மாகாணங்களில் உள்ள திட்டங்களுக்கு திறைசேரியால் ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி பஸ் நிலையம், மக்கள் கண்காட்சி, பொதுச் சந்தை ஆகியன இவ்வருடம் நடைமுறைப்படுத்துவதற்காக 44 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில், 29 திட்டங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளதாக, நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களுக்கு திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கிய ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி 22 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இதன் கீழ் 05 திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. மற்றும் நாடு முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடியால், 13 திட்டங்களின் பணிகள் மெதுவாக நடந்து வருகின்றன.

பேர வாவியைச் சுற்றி நடைபாதை மற்றும் பொது வசதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் அத்தியாவசியப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன.

அரசியல் தலைமை மற்றும் மக்களின் வேண்டுகோளின் பேரில் ரூ. 2,452 மில்லியன் செலவில் நிர்மாணங்களை ஆரம்பித்த யாழ்ப்பாண நகர மண்டப நிர்மாண வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு யாழ். மாநகர சபை வழங்க வேண்டும். அதன் கட்டுமான பணிக்காக ரூ. 1,200 மில்லியன் செலவிடப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன. முழுவதுமாக நிறைவு செய்வதற்கு 2,620 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கு மேலதிகமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியிலிருந்து 8,000 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி செத்சிறிபாய மூன்றாவது கட்டம் உட்பட 07 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் 03 திட்டங்களின் வேலைகள் நிறைவடைந்து ஏனைய வேலைத் திட்டங்கள் குறைந்த முன்னேற்றத்துடன் நடைபெற்றுக் கொண்டு செல்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

### அடுத்த வருடத்தில்...

சந்தையில் அடிக்கடி விலைகளில் மாற்றம் ஏற்படுகின்றன. அதற்கு அவசியமான நடவடிக்கைகளை வர்த்தக அமைச்சர் என்ற வகையில் தாம் முகாமைத்துவம் செய்வதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வெளிநாட்டமைச்சின்...

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொழும்பிலுள்ள தலைமை கொன்சியூலர் அலுவலகம், பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கான தூதரகங்களினூடாக 2023ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சான்றிதழ்கள் / ஆவணங்கள் சான்றுறுதிப்பபடுத்தலுக்கான கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவு மற்றும் அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களினூடாக சான்றுறுதிப்படுத்தப்படும் சான்றிதழ்கள் / ஆவணங்களுக்கான புதிய கட்டண விபரங்கள் பின்வருமாறு:

பரீட்சைகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் சான்றிதழ்களுக்கு 800 ரூபா.

வெளிநாட்டு பிரஜைகளுக்காக இலங்கை அரசினால் விநியோகிக்கப்படும் ஏதேனும் ஆவணம் 3,000 ரூபா.

ஏதேனும் ஏற்றுமதி ஆவணம் – 8,000 ரூபா.

ஏனைய ஆவணம் – 1,200 ரூபா

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர், திருத்தப்பட்ட கட்டண விபரங்கள் தொடர்பில் 16.11.2022 திகதிய 2306/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிய முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாரதப் பிரதமர் மோடியின் ...

நடைபெற்றது. தாயாரின் மறைவை அடுத்து அகமதாபாத் விரைந்தார் மோடி.

அவரது உடல் வைக்கப்பட்டிருந்த அகமதாபாத் அருகே ரேசான் கிராமத்தில் உள்ள தாயாரின் குடியிருப்புக்கு பிரதமர் மோடி சென்று தனது தாயாரின் உடலுக்கு மாலையிட்டு, மரியாதை செய்து அவரை வணங்கினார்.

தொடர்ந்து, தாயாரின் உடல் இறுதிச்சடங்குக்காக எடுத்துச்செல்லப்பட்டது. அதன்போது, வீட்டில் இருந்து தனது தாயாரின் உடலை பிரதமர் மோடி தோளில் தூக்கி சென்றார்.

பின்னர் உடல் ஊர்தியில் வைக்கப்பட்டு , பிரதமர் மோடியும் தாயாரின் உடலுடன் சென்றார். குஜராத் தலைநகர் காந்திநகரில் இறுதிச்சடங்கு நடைபெற்றது. அங்கு பிரதமர் மோடியின் தாயாரின் உடல் தகனம் செய்யப்பட்டது.

பிரதமரின் தாயார் ஹீராபென் மோடி அகமதாபாத்தில் உள்ள யு.என் மேத்தா வைத்தியசாலையில் புதன்கிழமை (28) சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவரது உடல்நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் மோடியும் அவரது தாயாரை வைத்தியசாலையில் வந்து சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இருப்பினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரண்டே நாட்களில் பிரதமரின் தாயார் உயிரிழந்துள்ளார்.

100 வயதான ஹீராபென் மோடி, பிரதமரின் இளைய சகோதரர் பங்கஜ் மோடியுடன் காந்திநகர் அருகே உள்ள ரேசன் கிராமத்தில் வசித்து வந்தார். பிரதமர் தனது பெரும்பாலான குஜராத் பயணங்களின் போது ரேசான் கிராமத்திற்கு சென்று தாயாரை அடிக்கடி சந்தித்து அவருடன் நேரத்தை செலவிடுவார்.

### கால்பந்து உலகின் ...

வந்த அவருக்கு இதயம் மற்றும் சிறுநீரக செயலிழப்புக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் பீலே புற்றுநோயுடன் நீண்டகாலமாக போராடி இறந்துவிட்டதாக அவரது முகவர் மற்றும் அவரது குடும்பத்தினர் நேற்று உறுதிப்படுத்தினர்.

கால்பந்து உலகின் ஜாம்பவான் பீலேவின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக கடந்த நாட்களில் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில்,பீலேவிற்கு இறுதிக்கட்ட சிகிச்சை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு பீலேவிற்கு பெருங்குடல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதுடன் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவர் கடந்த செப்டெம்பர் முதல் கீமோதெரபி சிகிச்சையும் எடுத்து வந்துள்ளார்.

இந்நிலையில் கீமோதெரபி சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை என கடந்த சில நாட்களாக அவரின் உடல்நிலை பலவீனமடைந்து வந்துள்ளது.

இதனால் சாவோ பாவ்லோ மாகாணத்தில் உள்ள போல்ஹா பகுதி மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இதன்போது கீமோதெரபி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து 'பலியேட்டிவ் கேர்' எனப்படும் இறுதிகட்ட சிகிச்சை அளிக்கும் பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று கால்பந்து உலகின் ஜாம்பவான் பீலே உயிரிழந்துள்ளார்.

பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே, மூன்று முறை உலகக்கிண்ணம் (1958, 1962, 1970) வென்ற வீரர் ஆவார்.

பிரேசில் அணிக்காக 77 கோல் அடித்துள்ளார். ஒட்டுமொத்தமாக 1,363 போட்டிகளில் 1,281 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.

### மோடியின் உதவிகளால் இலங்கை...

இந்திய பிரதமர் மோடி செய்த நிதியுதவியால் இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டு வருகிறது. தமிழக முதல்வரும் உணவுப் பொருட்கள் அனுப்பி உதவினார். மற்ற நாடுகள் உதவி செய்யாதபோது இந்தியா உதவிக்கரம் நீட்டியது பெரிதும் உதவியாக இருந்தது.

இலங்கை பொருளாதார வீழ்ச்சியின் போது மனிதாபிமான அடிப்படையில் பிற நாடுகளை விட இந்தியா அதிகம் உதவிகள் செய்துள்ளது. இதனால் இலங்கை இந்திய உறவு மேலும் பலப்பட்டுள்ளது. இலங்கையில் டாலர் தட்டுப்பாடு நிலவியுள்ளதால், பிற நாட்டு கரன்சிகளை பயன்படுத்த அனுமதி வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஐ.எம்.எப். நிதி கிடைத்தால் இலங்கை இன்னும் இரு ஆண்டுகளில் பழைய நிலைக்கு திரும்ப வாய்ப்புள்ளது. மேலும் உள்நாட்டு போருக்கு பிறகு இலங்கை அபிவிருத்தி திட்டங்களுக்கு சீனா அதிக அளவு முதலீடு செய்தது. சீனாவிற்கு அதிகளவு வட்டி கட்ட வேண்டி இருந்த காரணத்தினால், இலங்கை பொருளாதாரம் வீழ்ச்சியடைய காரணமாக அமைந்தது என தெரிவித்தார்.

மேலும், எல்லை தாண்டி வரும் மீனவர்களையே இலங்கை கடற்படை கைது செய்கிறது. அவர்களை உடனுக்குடன் விடுவித்தும் வருகிறது. ஆனால் கடத்தல், சட்டவிரோத நடவடிக்கை ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கை சட்டப்படி நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. இதில் நீதிமன்றம் மூலமே தீர்வு காண முடியும் அல்லது 2 நாடுகளின் பேச்சுவார்த்தையில் தீர்வு காணலாம். மீன்பிடி எல்லை பிரச்சினையை தீர்ப்பது, இருநாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தை மட்டத்திலேயே உள்ளது எனவும் தெரிவித்த அவர், சேது சமுத்திர திட்டம் குறித்து இந்தியா தான்முடிவு செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

### வவுனியாவில் பதுக்கப்பட்ட...

இவை அதிகளவில் வடக்கு மக்களின் பசி போக்கும் திட்டத்தில் கிராம சேகவர் பிரிவு ரீதியில் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மதுராநகர் அண்மையில் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளானதால் பெரும் கஸ்டத்திற்கு முகம் கொடுத்து வந்ததாக தெரிவித்த அப்பகுதி மக்கள், அதனை தமக்கு வழங்காது கிராம சேவகரும், கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் இணைந்தே இதனை பதுக்கி வைத்ததாகவும் தெரிவித்தனர்.

பதுக்கி வைக்கப்பட்ட அரிசியை பொதுமக்கள் கண்டுபிடித்ததையடுத்து அதனை உடனடியாக மக்களுக்கு வழங்க குடும்ப அட்டைகளுடன் வருமாறு கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தாகவும் மக்கள் குற்றம் சாட்டினர்.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருக்கு கிராம மக்களால அறிவிக்கப்பட்டதையடுத்து வியாழக்கிழமை (29) மாவட்ட செயலக கணக்காய்வு உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலாளர் தலைமையில் அங்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன் அரிசி பாவனைக்கேற்றதா என்பதை ஆராய பொது சுகாதார பிரசோதகர்களும் அங்கு பிரசன்னமாகி பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது இந்திய உதவித்திட்டத்தில் கிடைத்த 1,272 கிலோ அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

அரிசியை மேலதிக பரிசோதனைகளுக்காக கொண்டு செல்ல வேண்டியிருப்பதனால் அரிசி முழுவதனையும் பிரதேச செயலகத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென பொதுமக்களிடம் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்ததுடன் அரிசி மூடைகள் தற்போது பயன்படுத்தும் நிலையில் இல்லையெனவும் தெரிவித்தனர்.

அப்பகுதி மக்களுக்கு கருத்து தெரிவித்த உதவி பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தரின் பக்கம் இதில் பிழைகள் இருந்தாலும் கூட, பொது அமைப்புகளுக்கு தெரியாமல் இருக்கவில்லை எனவும், தனியே அரச உத்தியோகத்தர்கள் வைத்து மட்டும் கிராமத்தை நடத்தவில்லை. அதற்காகவே பொது அமைப்பக்களை தெரிவு செய்கின்றோம். பொது அமைப்புக்களுக்கும் அதற்கான பொறுப்புள்ளது. தங்கள் மக்களின் பிரச்சனையை உரிய தரப்புக்கு எடுத்து கூறியிருக்க வேண்டும். இதற்கான பொறுப்பை பொது அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

புகையிரத நிலையத்திற்கு வந்த பொருட்களை வாகனங்களில் கிராமங்களுக்கு அனுப்பிய போது மழை காரணமாக அரிசி மூடைகள் சில நனைந்தமையால் மேற்படி இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாக கிராம சேவகரும், கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் இப்போது தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த அரிசி பயன்படுத்தும் நிலையில் உள்ளதா என்பதனை பரிசோதிப்பதற்காகவே வந்திருந்தோம். பொது சுகாதார பரிசோதகர்களின் அறிக்கையின் பிரகாரம் குறித்த அரிசி உடனடியாக பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லையென தெரிவித்துள்ளனர்.

இந்த அரிசியை இதே இடத்தில் கழுவி காய வைத்து மீண்டும் வழங்குவதற்கான நிலைக்கு கொண்டு வரலாமாக இருந்தாலும் இவ்விடத்தில் அதற்கான வசதிகள் இல்லை. ஆகவே அதனை எடுத்துச் சென்று பரிசோதித்து பொது சுகாதார பரிசோதகர்களின் அறிக்கை கிடைத்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கலாமென தெரிவித்தார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசனிடம் கேட்ட போது, இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட இடத்திற்கு உத்தியோகத்தர்கள் அனுப்பி விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

### போலந்து, துருக்கி.... (03 ஆம் பக்கத் தொடர்)

முற்றுகையிட்ட அதிகாரிகள், அங்கிருந்து 11 கடவுச்சீட்டுக்கள், 4 பற்றுச்சீட்டு புத்தகங்கள், 50 பிரசார துண்டுப்பிரசுரங்கள் உட்பட பல ஆவணங்களை கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட கணவன், மனைவி நேற்று முன்தினம் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### சீனாவில் தீவிரமாகும்... (03 ஆம் பக்கத் தொடர்)

இறந்தவர்கள் உடல்களை தகனம் செய்ய ஆம்புலன்ஸ் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து உலக நாடுகள் அனைத்திலும் உஷார் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா, இத்தாலி, தென்கொரியா, மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் சீனாவில் இருந்து வரும் விமான பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

### இலாபமீட்டும் நிறுவனமாக... (03 ஆம் பக்கத் தொடர்)

வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை வழங்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த புதிய மெகா ஸ்டார் வலையமைப்பின் கிளையை மினுவாங்கொடையில் (இலக்கம் 55 குருநாகல் வீதி, நாலந்த வித்தியாலத்துக்கு எதிரில ை) நேற்று முன்தினம் (29) இரா ஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த திறந்து வைத்தார்.

வாடிக்கையாளர்கள் கருவாடு, மாசி கருவாடு மற்றும் The Fishery by CEYFISH உணவகத்தால் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்களை சலுகை விலையில் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்னாயக்க, மினுவாங்கொட பிரதேச சபை தலைவர் குமார அரங்கல, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சத்துரங்க உடவத்த, முகாமைத்துவ பணிப்பாளர் துசார குமார உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள்.

### உறுதிப்படுத்திய தகவல்... (03 ஆம் பக்கத் தொடர்)

பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போன்ற போதைப்பொருட்களைப் பரப்புவதற்கு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

### தேயிலை மற்றும் இறப்பர்... (03 ஆம் பக்கத் தொடர்)

மொத்த தேங்காய் உற்பத்தி 2577.2 மில்லியன்களாகவும், இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் தேங்காய் உற்பத்தி 2850 மில்லியன் என வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2022 ஆண்டின் இலக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த அடுக்குமாடி குடியிருப்பில் 02 படுக்கையறைகள் கொண்ட வீடுகள் முற்றாக விற்று முடிந்ததாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது .

துபாய், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஓமான், கத்தார் மற்றும் பிஜி தீவுகளில் வசிக்கும் இலங்கையர் இந்த வீடுகளை வாங்கியுள்ளனர்.

வீடுகளுக்குரிய பணத்தை மொத்தமாக செலுத்துவதால் 10 சதவீதம் விலைக்கழிவும் கிடைக்கும்.

மேலும் 8 வீடுகளை வாங்க வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் கோரிக்கை விடுத்திருப்பதாக அந்த அதிகாரசபை கூறுகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீடுகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு விற்பனையிலிருந்து அடுத்த வருடம் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்ட திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.uda.gov.lk ஐப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக தகவல்கள் மற்றும் தேவையான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 077 7794016 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமும் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய கொரோனா கட்டுப்பாடு...

எனினும் முகக்கவசங்களை அணியவேண்டும் என்ற செய்தியை தொடர்ச்சியாக தெரிவிக்க வேண்டியுள்ளது என தெரிவித்துள்ள ஹேமந்த ஹேரத், நாடளாவிய ரீதியில் சில விடயங்களை பின்பற்றவேண்டும், ஆனால் அவை கட்டாயம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பாதிப்புகள் மற்றும் பலாபலன்கள் குறித்து ஆராய்ந்த பின்னரே புதிய நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறைகளை பின்பற்றுவதா இல்லையா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம், நாங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையும் சமூகம் மற்றும் அரசாங்கத்தின் மீது தாக்கத்தை செலுத்தும். எந்த கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முன்னர் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு பலாபலன்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### அடுத்த ஆண்டில் புதிதாக...

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள குறிப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1,100 ஊழியர்களில் இருவர் 2023 இல் ஓய்வு பெறுவார்கள் என்றும் புதிய ஆட்சேர்ப்பு எதுவும் இடம்பெறாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வாகன இலக்க தகடுகளில்...

சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. இதனால் 2023 ஆம் ஆண்டு முதல் இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

### SJBயின் தமிழ் பிரிவின்...

தலைவருமான சஜித் பிரேமதாசவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் பிரிவு ஊடகப் பேச்சாளர் பதவிக்கான நியமனக் கடிதத்தை, கட்சியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, உமாச்சந்திரா பிரகாஷிடம் கையளித்தார்.

### ஜனாதிபதி ரணில்...

இந்த நேரத்தில் பிரதமர் மோடி மற்றும் குடும்பத்தினருக்கு எனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கால்பந்து ஜாம்பவான் பீலேவின் மறைவை அறிந்து நான் ஆழ்ந்த வருத்தமடைந்தேன். அவர் ஒரு விதிவிலக்கான விளையாட்டு வீரராக இருந்தார், அவர் இளைஞர்களையும் பெரியவர்களையும் கவர்ந்தார்.

பீலேவின் குடும்பத்தினருக்கும் பிரேசில் நாட்டு மக்களுக்கும் எனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

### 2023 ஆம் ஆண்டு...

நிபுணர் ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர். 12 ராசிகளுக்கான பலன்கள் எதிர்வரும் 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உங்கள் வாரமஞ்சரியில் வெளிவருகிறன. உங்கள் பிரதிகளுக்கு எங்கள் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்.

தமிழ் நாட்டின் பிரபல ஜோதிட நிபுணர் ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர் இந்திய தொலைக்காட்சிகள், வானொலி நிகழ்ச்சிகளில் ஜோதிடம் தொடர்பான பல்வேறு நிழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

தினமும் தமிழ் நாட்டின் 'இன்று நன்று' காலை 7.45 மணிக்கும் ஸ்ரீ சங்கரா தொலைகாட்சியில் காலை 6.45 மணிக்கு சுபதினம் நிகழ்ச்சியிலும் மெகா தொலைக்காட்சியில் பகல் 12.30 சுபகிரகம் என்ற நிகழ்ச்சியிலும் பல யூ டியூப் அலைவரிசைகளிலும் சக்தி விகடன், ஆன்மீக உலா, ஆன்மீக பரிகாரம், குரு போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுவருகிறார்.

# சர்வதேச செய்திகள்

## நெதன்யாகுவின் தீவிர வலதுசாரி அரசு இஸ்ரேலில் ஆட்சி அமைப்பு



இஸ்ரேலிய வரலாற்றில் தோன்றிய தீவிர வலதுசாரி மற்றும் மதச்சார்பு அரசு ஒன்று பதவி ஏற்றுள்ளது.

பென்ஜமின் நெதன்யாகுவின் லிகுட் கட்சி, தீவிர தேசியவாத மற்றும் தீவிர பழைமைவாத யூதக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்த நிலையில் அவர் மீண்டும் பிரதமர் பதவிக்குத் திரும்பியுள்ளார்.

அமைதியை தொடரவும் சிவில் உரிமைகளை பாதுகாக்கவும் நெதன்யாகு வாக்குறுதி அளித்துள்ளார்.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (29) நடந்த சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இஸ்ரேலிய மக்களுக்குத் தமது நிர்வாகம் அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டுத்தரும் என்று குறிப்பிட்டார்.

ஊழல் மற்றும் பண மோசடிக் குற்றச்சாட்டில் வழக்கு விசாரணைக்கு முகம்கொடுக்கும் நெதன்யாகுவுடன் கூட்டணி அமைக்க மிதவாதக் கட்சிகள் மறுத்த நிலையிலேயே அவர் கடும்போக்குவாதிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்துள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேலிய கொடி மற்றும் வானவில் கொடிகளை ஏந்திய பல நூறு ஆர்ப்பட்டக்காரர்கள் புதிய அரசுக்கு எதிராக பாராளுமன்றத்திற்கு வெளியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் “வெட்ககரமானது”, “ஆபத்தானது” மற்றும் “இனவாதிகள் ஒழிக” என குறிப்பிடப்படும் பதாகைகளை ஏந்தி இருந்தனர்.

நெதன்யாகு இஸ்ரேல் பிரதமராக பதவி ஏற்பது இது ஆறாவது முறையாகும். 18 மாதங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சியினர் அவரை பதவியில் இருந்து வெளியேற்றி இருந்தனர். எனினும் நாட்டை புதிய வழியில் நடத்தப்போவதாக அவரது கூட்டணியைச் சேர்ந்தவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

புதிய அரசின் புதிய கொள்கை கடந்த புதனன்று வெளியிடப்பட்டிருந்தது. அதில், “யூத மக்களுக்கு இஸ்ரேலிய நிலத்தின் அனைத்து பகுதிகளிலும் பிரத்தியேகமான மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாத உரிமை உள்ளது” என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையும் உள்ளடக்கப்பட்டிருப்பதோடு அங்குள்ள குடியேற்றங்களை மேம்படுத்தவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

1967இல் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது தொடக்கம் அங்கு சுமார் 140 குடியேற்றங்களில் 600,000 வரையான யூதர்கள் வாழ்கின்றனர். இந்தக் குடியேற்றங்களை பெரும்பாலான சர்வதேச சமூகம் சட்டவிரோதமானது எனக் கருதுகின்றனர். தவிர, மேற்குக் கரையில் இஸ்ரேலிய அரசின் அனுமதி இன்றியும் சுமார் 100 சிறு சிறு குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் தீவிர தேசியவாத மதச்சார்பு சியோனிச கட்சியுடனான கூட்டணி ஒப்பந்தம் கடந்த வாரம் கைச்சாத்தானது. அதில் இந்த சட்டவிரோத குடியேற்றங்களை சட்டபூர்வமாக்குவதற்கு நெதன்யாகு இணங்கியுள்ளார். தவிர மேற்குக் கரையை இஸ்ரேலிய ஆட்புலத்திற்குள் இணைப்பதற்கும் நெதன்யாகு உறுதி அளித்துள்ளார்.

மேற்குக் கரை குடியேறியாக இருக்கும் மதச்சார்பு சியோனிசத் தலைவர் நிதி அமைச்சராக பதவி ஏற்கவிருப்பதோடு மேற்குக் கரையில் உள்ள குடியேற்றக் கட்டடங்களுக்கு ஒப்புதல் அளிப்பது மற்றும் பலஸ்தீனர்களை கட்டுப்படுத்தும் சிவில் நிர்வாகத்தின் மேற்பார்வையாளராகவும் செயற்படவுள்ளார்.

மற்றொரு குடியேறியும், தீவிர தேசியவாத அரசியல்வாதியுமான யூத சக்தி கட்சியின் தலைவர் இடமர் பென் கிவிர் தேசிய பாதுகாப்பு அமைச்சராகவுள்ளார். இவர் இனவாதம் மற்றும் பயங்கரவாத அமைப்பு ஒன்றுக்கு ஆதரவு அளித்ததற்காக குற்றங்காணப்பட்டவராவார்.

மேற்குக் கரை குடியேற்றங்களை மேம்படுத்தும் திட்டம் பிராந்தியத்தில் பின் விளைவை ஏற்படுத்தும் என்று பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பேச்சாளர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன பிரச்சினைக்கான இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தை நெதன்யாகு கூட்டணி நிராகரிக்கிறது. இந்தத் திர்வுத் திட்டம் சர்வதேச ஆதரவை பெற்ற ஒன்றாகும்.

## அமெரிக்க பனிப்புயல்: பலி 61 ஆக அதிகரிப்பு



அமெரிக்காவின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருக்கும் பனிப்புயலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.

இதில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கு நியூயோர்க்கில் மேலும் இருவர் உயிரிழந்த நிலையில் அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 39 ஆக உயிர்ந்துள்ளது. இதில் 17 பேர் வெளியில் இருந்த நிலையில் உயிரிழந்திருப்பதோடு 11 பேர் வீடுகளிலும் நால்வர் கார்களுக்குள் இருந்த நிலையிலும் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் பனிப்புயலுடன் தொடர்புபட்ட கார்விபத்துகளில் ஒஹியோ மாநிலத்தில் ஒன்பது உயிழப்புகள் பதிவாகியுள்ளன. அமெரிக்காவில் பாதிக்கும் அதிகமான மாநிலங்களில் பனிப்புயல் மற்றும் கடும் குளிர் தொடர்பில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் நியூயோர்க்கில் வெப்பம் உயர்ந்து பனி உருகி வரும் நிலையில் வெள்ளம் ஏற்படும் அபாயம் பற்றியும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைனிய ஏவுகணையை சுட்டுவீழ்த்தியது பெலாரஸ்



பெலாரஸ் எல்லைக்குள் உக்ரைனிய வான் பாதுகாப்பு ஏவுகணை ஒன்றை சுட்டுவீழ்த்தியதாகக் குறிப்பிடும் பெலாரஸ், உக்ரைனிய தூதுவருக்கு விளக்கம் கேட்டு அழைப்பு விடுத்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா சரமாரி வான் தாக்குதல்களை நடத்தியபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. திறந்த வெளிப்பகுதி ஒன்றில் உக்ரைனிய ஏவுகணை பாகம் இருக்கும் காட்சிகளை பெலாரஸ் அரச தொலைக்காட்சி காண்பித்துள்ளது.

வான் பாதுகாப்புக் காரணமாகவே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது என்று உக்ரைனிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


ரஷ்யாவின் நெருங்கிய கூட்டாளியாக இருக்கும் பெலாரஸ், இது பற்றி உக்ரைன் முழு விசாரணை நடத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துள்ளது.

கடந்த பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் உக்ரைனிய ஏவுகணை ஒன்றை பெலாரஸ் சுட்டுவீழ்த்துவது இது முதல்முறையாகும்.

இது பற்றி விளக்கம் கோரி பெலாரஸ் வெளியுறவு அமைச்சு உக்ரைன் தூதுவரை அழைத்துள்ளது. “இந்த சம்பவம் மிகத் தீவிரமானது என்று பெலாரஸ் தரப்புக் கருதுகிறது” என்று வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அனடோலி கிளாஸ் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் இருப்பதற்கு உக்ரைன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். உக்ரைனுடனான எல்லையில் இருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் பிரேஸ்ட் பிராந்தியத்தில் உள்ள ஹார்பச்சா என்ற கிராமத்திற்கு அருகிலேயே இந்த ஏவுகணை விழுந்துள்ளது.

## பாகிஸ்தான் அரசு சிக்கன நடவடிக்கை



நாடு நிதி நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளதைக் கருத்தில் கொண்டு சிக்கன நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இதன் நிமித்தம் பல்வேறு கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய அறிவித்தலை பாகிஸ்தான் அமைச்சரவை செயலகம் விடுத்துள்ளது. அந்த அறிவித்தலில் அரசாங்க வாகனங்களுக்கான எரிபொருள் மானியக் குறைப்பு, உத்தியோகபூர்வ பயணங்களுக்கு கட்டுப்பாடு, கொடுப்பனவுகள் நீக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாகிஸ்தான் அமைச்சரவை செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், பிரதமரின் ஆரம்ப அங்கீகாரம் மற்றும் நாட்டின் நிதிப் பற்றாக்குறை நிலை உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிதி நெருக்கடி சீரடையும் வரையும் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படலாகாது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## ஆங் சான் சூக்கியிற்கு மேலும் 7 ஆண்டு சிறை

மியன்மாரில் பதவி நீக்கப்பட்ட தலைவி ஆங் சான் சூக்கியிற்கு அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் ஒன்று நேற்று (30) மேலும் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இதன் மூலம் அவரது மொத்த சிறைத் தண்டனை 33 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது.

ஜனநாயக முறையில் தேர்வான முன்னாள் தலைவியான சூக்கி 2021 இராணுவ சதிப்புரட்சியில் ஆட்சி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் வீட்டுக் காவலில் உள்ளார். அது தொடக்கம் அவர் 19 குற்றச்சாட்டுகளுக்கு 18 மாதங்களாக வழக்கு விசாரணைகளுக்கு முகம்கொடுத்து வருகிறார். இதனை ஏமாற்றுச் செயல் என்று உரிமைக் குழுக்கள் கூறு வருகின்றன.

அவரை விடுவிக்கும்படி பாதுகாப்புச் சபை கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில் அவர் மீதான கடைசி ஐந்து குற்றச்சாட்டுகளுக்குமான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது. இதில் அரசின் அமைச்சர் ஒருவருக்காக ஹெலிகொப்டர் ஒன்றை வாடகைக்குப் பெறும் ஒழுங்குமுறையை அவர் பின்பற்றாததால் ஊழல் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டார்.



அவர் ஏற்கனவே 14 வெவ்வேறு வழக்குகளில் குற்றங்காணப்பட்டுள்ளார். இதில் கொவிட் பொது பாதுகாப்பு விதிகளை மீறியது, வோக்கி டோக்கி கருவியை இறக்குமதி செய்தது மற்றும் உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுகளும் அடங்கும்.

இந்த ஆண்டில் இடம்பெற்ற அவரது வழக்குகள் பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் தடுக்கப்பட்ட மூடிய அறையிலேயே இடம்பெற்றன. அவரது வழக்கறிஞர் ஊடகங்கள் முன் உரையாற்றவும் தடை செய்யப்பட்டார். தன் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளார். அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற 77 வயதான ஆங் சான் சூக்கி வாழ்நாளில் அதிக காலத்தை தலைநகர் நய் பிய் டவ்வில் வீட்டுக் காவலிலேயே கழித்துள்ளார்.

இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் 16,600க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டதோடு இவர்களில் சூக்கியின் கட்சி உறுப்பினர்கள் பலர் உள்ளனர். இதில் 13,000 பேர் தொடர்ந்தும் சிறையில் இருப்பதாக அரசியல் கைதிகளுக்கான உதவி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## பாம் எண்ணெய் ஏற்றுமதிக்கு இந்தோனேசியா கட்டுப்பாடு



இந்தோனேசியா பாம் எண்ணை ஏற்றுமதியை ஜனவரி 1ஆம் திகதி முதல் மட்டுப்படுத்தவுள்ளது. உள்நாட்டு விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில் உள்நாட்டில் விற்கப்படும் ஒவ்வொரு தொன்னை விடவும் குறைவான அளவை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய கட்டுப்பாடு கொண்டுவரப்படுகிறது.

இதில் ஏற்றுமதியாளர்கள் தங்கள் உள்நாட்டு விற்பனை அளவை விட ஆறு மடங்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுவார்கள். எனினும் இது தற்போதைய அளவான எட்டு மடங்கை விட குறைவாகும். அரசின் சட்டத்தில் இது பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமையல் எண்ணெய் விலை கட்டுப்பாட்டை மீறி அதிகரித்ததை அடுத்து இந்தோனேசிய இந்த ஆண்டு ஆரம்பத்தில் பாம் எண்ணெய் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு புதிய விதிகளை அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட்–19: சீனர்கள் மீது பல நாடுகள் கட்டுப்பாடு

சீனாவில் கொரோனா தொற்று பரவல் தீவிரம் அடைந்து வரும் நிலையில் அந்நாட்டு பயணிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

புதிய கொவிட் திரிபு பற்றி அமெரிக்கா தொடக்கம் ஜப்பான் வரை அச்சம் அடைந்துள்ளன. எனினும் இவ்வாறான புதிய திரிபு பற்றி இன்னும் உறுதியான அறிவிப்பு வெளியாகவில்லை. புதிய தொற்று பரவல் தொடர்பில் சீனா வெளியுலகுக்கு போதிய தகவல்களை வெளியிடவில்லை.

முழுமையாகக் கொரோனா தொற்றை ஒழிக்கும் கொள்கையை சீனா கைவிட்டதை அடுத்து அந்நாட்டில் அதிகரித்து வரும் தொற்றுச் சம்பவங்கள் பற்றி உலக சுகாதார அமைப்பும் கவலை வெளியிட்டுள்ளது.

“சீனாவில் பரவி வரும் கொரோனா தொற்று குறித்து விளக்கம் அளிக்க அந்நாடு முன்வர வேண்டும். இது குறித்தான விரிவான தகவல்கள் எங்களுக்குத் தேவை. நோய்த்தொற்றை தடுக்கும் வகையில் தொடர்ந்து கண்காணிக்கவும் தடுப்பூசி போடவும் சீனாவை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறோம்” என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இத்தாலி, தென் கொரியா, மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் சீனாவில் இருந்து வரும் விமான பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளன.



# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயக் கலந்துரையாடல்

**கல்லடி குறூப் நிருபர்**




மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான விசேட கூட்டமொன்று, அம்மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (29) முன்தினம் நடைபெற்றது.

எல்லை நிர்ணயம் மேற்கொள்ளும் போது ஏற்படும் நிர்வாக எல்லை பிரிப்புகள் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றை தீர்ப்பதற்கான ஆலோசனைகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளினால் முன்மொழியப்பட்டதுடன், அதன் சாத்திய வளநிலை தொடர்பாகவும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் கலந்து கொண்டு, எல்லை நிர்ணயம் தொடர்பாக விளக்கமளித்தார்.

## மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**



மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றதுடன், சிறுவர்களின் பல்வேறு நலன்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள சிறுவர்களுக்கு துரித சேவைகளை வழங்குவதற்கும் அச்சேவைகளின் போது ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வது தொடர்பிலும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றுக்கு அதிகாரிகளினால் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், முன்பிள்ளைப் பருவ வேலைத்திட்டம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன், சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகி வருகின்றமை தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அவ்வாறு இடைவிலகியுள்ள மாணவர்களை மீண்டும் கல்வி நடவடிக்கையில் ஈடுபடுத்துவதினால் அவர்களை சிறந்த நபர்களாக மாற்ற முடியுமென்று இக்கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

## பலஸ்தீன் புனித மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் இமாமுக்கு காத்தான்குடியில் வரவேற்பு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடிக்கு பலஸ்தீன நாட்டின் ஜெரூஸலம் புனித மஸ்ஜிதுல் அக்ஸாபைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் அஷ் ஷெய்க் அலி உமர் அப்பாஸி நேற்று (30) வருகை தந்ததுடன், காத்தான்குடி அல் அக்ஸா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இதன்போது, ஜும்ஆ பிரசங்கத்தையும் ஜும்ஆ தொழுகையையும் அவர் நடத்தி வைத்ததுடன், சிறப்புச் சொற்பொழிவையும் ஆற்றினார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் அழைப்பின் பேரில் வருகை தந்த பலஸ்தீனைச் சேர்ந்த புனித மஸ்ஜிதுல் அக்ஸா பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் அஷ் ஷெய்க் அலி உமர் அப்பாஸிக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டதுடன், அவர் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## ஓய்வுபெறும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளருக்கு கௌரவம்

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**



இவ்வருடத்துடன் ஓய்வுபெறவுள்ள மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரனை கௌரவிக்கும் நிகழ்வொன்று, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று (29) முன்தினம் நடைபெற்றது.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்குப் பெரிதும் பங்காற்றிய மாவட்ட செயலாளருக்கு பாராட்டுத் தெரிவித்தார். அத்துடன், மாவட்ட செயலாளருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன், நினைவுசின்னமும் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட செயலாளர், மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளில் இராஜாங்க அமைச்சருடன் இணைந்து ஈடுபட்டதில் தான் சந்தோஷமடைவதாகவும் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு தான் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் மூவருக்கு நியமனக் கடிதங்கள்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று, மண்முனை தென்எருவில்பற்று, போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றவுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் 3 பேருக்கு, அம்மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனினால் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் வைத்து நேற்று (29) முன்தினம் இக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களுக்கான 25 வெற்றிடங்கள் நிலவியதைத் தொடர்ந்து, அவற்றை நிரப்பும் வகையில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் இந்நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் கடந்த ஏப்ரலில் 7 பதிவாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

## பொருளாதாரப் பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்

### தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**



பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், நாட்டின் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ் தெரிவித்தார்.

முகாமைத்துவ வர்த்தக பீடத்தினுடைய முகாமைத்துவத்துறையின் ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கத் தொகுப்பு, தொகுதி2 நூல் வெளியீடு, முகாமைத்துவம் மற்றும் பொருளியல் ஆய்வுச் சஞ்சிகை இதழ் 1 வெளியீடு ஆகியன தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நேற்று (29) முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"முதல் முயற்சியாக தமிழ்மொழி மூலம் வெளியிடப்பட்ட முகாமைத்துவமும் பொருளியலும் ஆய்வுச் சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்ட ஆய்வுகள் சிறந்த தரத்தைக் கொண்டிருப்பதால், இதனை சிறந்த தேசிய ஆய்வுத் தளங்களில் பட்டியலிடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

ஆய்வு அறிக்கையின் நோக்கம் தனிப்பட்ட மதிப்புகளுடன் தொடர்புடைய ஆய்வின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்கு பாடத்துக்கு உதவியாகவும் அறிக்கையானது ஆய்வின் உடனடி நோக்கத்தை மட்டுமல்ல, எந்த பெரிய இறுதி நோக்கத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

கல்வியை ஆராய்ச்சி செய்யும் போது, உங்கள் நோக்கத்தை வரையறுப்பது முக்கியம். ஒரு நோக்க அறிக்கை வரும்போது, இது உங்கள் தரமான அல்லது அளவு ஆராய்ச்சியின் நோக்கத்தை தெளிவாக வரவேற்கிறது. ஆகவே தனிப்பட்ட மற்றும் உலக எடுத்துக்காட்டுகள் மூலம் ஆராய்ச்சி நோக்க அறிக்கையில் விவரங்களை பெற வேண்டும்.

கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளோடு ஆராய்ச்சியும் ஒரு கல்வியாளர்களின் முக்கிய வகிப்பாகும் மற்றும் கோட்பாடு சம்பந்தமான கல்வியுடன் சேர்த்து ஆராய்ச்சி செய்வதும் அவசியமாகும்" என்றார்.

## மூதூர் வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் கையளிப்பு



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் ஆதார வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் வண்டியொன்றை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் நேற்று (29) முன்தினம் கையளித்து வைத்தார்.

இதன் பின்னர், மூதூர் ஆதார வைத்தியசாலையையும் கிழக்கு மாகாண ஆளுநர் பார்வையிட்டார்.

அத்துடன், வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்ட ஆளுநர், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவது தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லை வீதியில் கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இச்சந்தேக நபரை நேற்று (29) முன்தினம் இரவு கைது செய்த பொலிஸார், அவரிடமிருந்து 6 கிராம் 680 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் ஒரு கிராம் 900 மில்லி கிராம் கேரள கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் கல்முனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மலசலக் குழியில் தவறி விழுந்து சிறுவன் பலி

**வாச்சிக்குடா விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்ணகி கிராமத்திலுள்ள வீட்டு வளாகமொன்றில் மலசலகூடத்துக்காக வெட்டப்பட்டிருந்த குழியில் 7 வயதுச் சிறுவனொருவன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளான்.

கண்ணகி கிராமத்தைச் சேர்ந்த ரவிக்குமார் லிதிஸ் எனும் சிறுவனே நேற்று (29) இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக மலசலகூடத்துக்காக வெட்டப்பட்டிருந்த இக்குழியில் நிரம்பியிருக்கும் நீரை அவ்வப்போது தமது தேவைகளுக்காக இச்சிறுவனின் குடும்பத்தினர் பயன்படுத்தி வருகின்றனர். இதனை அவதானித்த இச்சிறுவனும், எவரும் இல்லாத வேளையில் மேற்படி குழியிலிருந்து நீரை அள்ள முயற்சித்த போதே, குழியில் விழுந்ததாக தெரியவந்தது.

இந்நிலையில், இச்சிறுவனை உறவினர்கள் தேடிய போது, அவன்

குழியில் விழுந்து காணப்பட்டுள்ளான். இதனையடுத்து, இச்சிறுவனை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும், சிறுவன் உயிரிழந்து காணப்பட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கஞ்சாவுடன் கைதான ஒருவர் விளக்கமறியலில்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

வீட்டில் 600 கிராம் கேரளா கஞ்சாவை மறைத்து வைத்திருந்த ஒருவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

அக்போபுர பகுதியைச் சேர்ந்த 38 வயதுடை ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய இச்சந்தேக நபரை பொலிஸார் கைது செய்ததுடன், அவரிடமிருந்து அக்கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரை, கந்தளாய் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று (30) ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவை வழங்கினார்.

## மாமாங்கம் பிரதேசத்தில் டெங்கு சோதனை



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாமாங்கம் பிரதேசத்திலுள்ள வீட்டு வளாகங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கொழிப்புச் சோதனை மேற்கொண்டனர்.

பருவ மழையைத் தொடர்ந்து வேகமாகப் பரவும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் இச்சோதனை நேற்று (29) முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. இச்சோதனை நடவடிக்கையில் சுகாதார வைத்தியதிகாரி பணிமனை, பிரதேச செயலகம், மாநகர சபை, சமுர்த்தி திணைக்களம் ஆகியன இணைந்திருந்தன.

## லேக் வீதி –02 இல் முறிந்து விழும் அபாயத்திலிருந்த மரங்கள் அகற்றல்



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மட்டக்களப்பு லேக் வீதி02 இல் முறிந்து விழும் நிலையிலிருந்த மரங்கள், மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் நேற்று (30) அகற்றப்பட்டன.

அண்மையில் நிலவிய சீரற்ற கால நிலையினால் இம்மரங்கள் பாறி முறிந்து விழும் நிலையில் காணப்பட்டன.

இவ்வாறு முறிந்து விழும் அபாயத்தில் காணப்பட்ட மரங்களை அப்புறப்படுத்தித் தருமாறு மட்டக்களப்பு மாநகர சபையிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து, இப்பணி முன்னெடுக்கப்பட்டது.

# 'கடலட்டைப்பண்ணைகள் எங்களுக்கு வேண்டும்' யாழில் மக்கள் பேரணி

**கோப்பாய் குறூப் நிருபர்**



கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அட்டைப்பண்ணைகள் வேண்டுமென நேற்று (30) யாழ்.கோட்டை பகுதியிலிருந்து பஸ்தரிப்பு நிலையம் வரை பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அட்டைப்பண்ணைகள் பெரிதும் உதவுகின்றன. தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியில் நாட்டுக்கும் மக்களுக்கும் அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் ஒரு தொழிலாக அட்டைப்பண்ணை காணப்படுகின்றது.

சிலர் தமது குறுகிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கடற்றொழில் மேற்கொள்ளாத சிலரும் அட்டைப்பண்ணையை விரும்பாத சிலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அட்டைப்பண்ணைகளை அமைப்பதற்கு சங்கங்களின் விருப்பமும் பெறப்பட்டே உரிய திணைக்களங்கள் ஊடாக அளவீடு செய்யப்பட்டு அனுமதியுடன் பண்ணைகளை அமைத்துள்ளோம். அட்டைப் பண்ணைகளை வேண்டாம் என கூறுவோர் ஏன் வேண்டாம் என முதலில் மீனவ சங்கங்களுடன் பேச வரட்டும் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கட்டும்.

யாழில் அட்டைப் பண்ணைகள் வேண்டுமென பலர் விண்ணப்பித்துள்ளனர். துறைசார்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே ஒரு சிலரின் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீனவ சமூகம் நன்மை அடைகின்ற அட்டைப் பண்ணைகளை ஊக்கப்படுத்த வேண்டுமே தவிர தடுக்கக் கூடாது என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தியதால் அதிகளவு இறால்கள் பிடிப்பு

- முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவிப்பு
- அமைச்சர் டக்ளஸ் களவிஜயம்





இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியதன் விளைவாக பெருந்தொகையான இறால்கள் பிடிபட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளர்.

கடந்த சில நாட்களாக இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான இறால் பிடிபட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளர்.முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தமது இடங்களுக்கு அழைத்துச் சென்று, தங்களினால் பிடிக்கப்பட்ட இறால்களை காண்பித்த கடற்றொழிலாளர்கள், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்தியமைக்காக அமைச்சருக்கு தமது நன்றியையும் தெரிவித்தனர். இதன்போது இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினரை மாத்திரம் நம்பி இருக்காமல், கடற்றொழிலாளர்களும் அதுதொடர்பாக கரிசனையுடன் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒளிவிழா நிகழ்வு

முல்லை. மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் 2022ஆம் ஆண்டிற்கான ஒளி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ். ஜே. வோல்டி சொய்சா தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் வருகைப்பாடல் இசைக்க, யேசு பாலனை இறையன்போடு அருட்தந்தை T.P யோன்சன் கையில் ஏந்தி தொழுவத்தில் வைத்ததைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் தீப ஒளியேந்திவர விழா ஆரம்பமாகியது.

மேலும் இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், மழலைகளின் ஆளுமைமிக்க கலை நிகழ்வுகள் , உத்தியோகத்தர்களின் கரோல் கீதங்கள், நாடகங்கள் போன்ற பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

தொடர்ந்து சிறார்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள், அதிதிகளுக்கான நினைவுச்சின்னங்கள் வழங்கும் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் M. ஜேசுறெஜினோல்ட் கலந்து சிறப்பித்தார்.





சிறப்பு விருந்தினர்களாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா, மல்லாவி பங்குத்தந்தை T.P. யோன்சன் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கௌரவ விருந்தினராக மாந்தை கிழக்கு உதவி பிரதேச செயலாளர் எம்.ஜெபமயூரன் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# வீடு புகுந்து திருட வந்தவரை மடக்கிபிடித்த பொதுமக்கள்

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ்.சாவகச்சேரிப் பகுதியில் வீட்டை உடைத்து திருட முற்பட்ட திருடன் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.சாவகச்சேரி வடக்கு , மண்டுவில் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீட்டில் ஒருவர் மட்டும் தங்கியிருந்துள்ளார். இதன்போது திருடன் கதவை உடைக்கும் சத்தம் கேட்டதும் சுதாகரித்துக்கொண்ட வீட்டிலிருந்தவர் அயலவர்களின் உதவியோடு திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். தெல்லிப்பழை பொலிஸாருக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம்

**யாழ். விசேட நிருபர்**



யாழ். தெல்லிப்பழை பொலிஸாருக்கு எதிராக, தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம சேவகர்கள், பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஜே/239 பிரிவு கட்டுவன் மேற்கு கிராம சேவகர் அலுவலகம் சில தினங்களுக்கு முன்னர் தீயிட்டு எரிக்கப்பட்டது. இதுகுறித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை தெல்லிப்பழை பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'சமாதான அலுவலர், சமாதான நீதிவானுக்கே இந்த நிலையா?', 'இன்று எங்களுக்கு நாளை உங்களுக்கு', 'எங்கள் சேவைக்கு பாதுகாப்பு இல்லையா?', 'அலுவலகத்தை சேதமாக்கியோரை கைது செய்', 'தீ வைத்தது உங்கள் கை வெந்தது உங்கள் சொத்து' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தமிழ் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை இருக்கவேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

தமிழ் கட்சிகளுக்குள் வேறுபாடுகளின்றி அர்த்தபூர்வமான இணைவொன்று இருத்தல் வேண்டுமென சமத்துவக்கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் திறப்பு விழாவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், சமத்துவக் கட்சியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இணையக் கூடாது என்று கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார். ஆனால் முதலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும். அவ்வாறிருக்கும் போதே இணைவும் அர்த்தபூர்வமாக காணப்படும்.

நாட்டில் இனங்களுக்கிடையேயும், இனத்திற்குள்ளும் சமத்துவம் இன்மையே எமது கட்சியின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்தது. எங்களுடைய கட்சியில் அதிகளவான பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். ஆனால்



தமிழரசுக் கட்சியை சேர்ந்த சிலர் கிளிநொச்சியில் சமத்துவக் கட்சியின் பெண் வேட்பாளர்களை நோக்கி கடந்த உள்ளூராட்சி

தேர்தலின் போது மிக மிக கேவலமாக அவதூறுகளை செய்தார்கள். சபையில் பேசமுடியாத வார்த்தைகளை பயன்படுத்தினார்கள்.

இன்று பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராட்டக் காலங்களில் ஒரு துளி வியர்வை சிந்தாதவர்கள். இவர்கள் தான்

அன்று வியர்வை சிந்தியவர்களுக்கு, ஆயுதம் ஏந்தி போராடியவர்களுக்கும் துரோகிகள் என்று பட்டம் வழங்குகின்றவர்களாக காணப்படுகின்றனர். துரோகி பட்டம் வழங்குவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை உள்ளது. இன்று ஆயுதம் ஏந்தி போராடியவர்கள் துரோகிகள் என்றால் அவர்களை ஆதரித்த மக்களும் துரோகிகளா? என அவர் தெரிவித்தார்.

# நாவாந்துறையில் கடலட்டை பதனிடும் தொழிற்சாலை

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ். பகுதியில் "சுகந் இன்ரநஷ்னல்" நிறுவனத்தின் கடலட்டை பதனிடும் தொழிற்சாலையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக நேற்று முன்தினம் (29) காலை 9 மணியளவில் திறந்து வைத்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தொழிலதிபர் சுகந்தசீலன் அரவிந்தனின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நூற்றுக்கணக்கானோர் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள்,

பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சீனஅரிசி தொடர்பில் வதந்திகளை பரப்பாதீர்கள்!

# சீன மக்கள் பயன்படுத்தும் அரிசியையே இங்கும் வழங்கினோம்

## இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் கவலை

**யாழ்.விசேட நிருபர்**

சீனநாட்டினால் வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் ஒரு சிலரால் வதந்தி மற்றும் பொய்யான தகவல்களை பரப்புவதாக இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் ஹூ வெய் கவலை தெரிவித்தார்.

சீன அரசின் நிவாரண அரிசி தொடர்பாக சமூக வலைத்தளங்களில் எழுப்பப்படும் விமர்சனங்கள் தொடர்பாக இலங்கைக்கான சீன பிரதித் தூதுவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போதே இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், சீன நாட்டினால் வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் ஒரு சிலரால் வதந்தி மற்றும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பில் ஊடகங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நான் உட்பட சீன மக்கள் உணவுக்கு பயன்படுத்தும் அரிசியையே இங்கு வழங்கினோம். அந்த அரிசியை ஸ்ரிக்கி றைஸ் (sticky rice) என்று சொல்வார்கள். அதனை சமைப்பதற்கான வழிமுறை என்பது சற்று வித்தியாசமானது என்றார்.

# வடமாகாண தனியார் நிறுவனங்களில் ஊழியர் நாளேடுகள் கட்டாயம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

வடமாகாணத்திலுள்ள தனியார் நிறுவனங்கள் வருகின்ற புதிய ஆண்டிலிருந்து ஊழியர் நாளேடுகளை பயன்படுத்த வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வடமாகாண தனியார் ஊழியர் சங்க தலைவர் சாமிநாதன் சிவகுமார் அறிவித்துள்ளார்.

நேற்று (30) யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தனியார் நிறுவனங்களில் 80 சதவீதமான ஊழியர்கள் தமது வரவை நிறுவனங்களில் பதிவு செய்வதில்லை. எனவே வருகின்ற புதிய ஆண்டிலிருந்து அவர்களுக்கான நாளேடு காட்சிப்படுத்துவதுடன் ETF, EPF இலக்கமும் நாளேட்டில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

இல்லாவிடின் தனியார் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். பெரிய தனியார் நிறுவனங்களில் இந்த நடைமுறை காணப்படுகின்றது. சிறிய நிறுவனங்கள், புடவை கடைகள், உணவகங்களில் தான் இந்த நடைமுறை இருப்பதில்லை.

எனவே ஊழியர்கள் வேலைக்கு வந்து செல்லும் நேரம் நாளேட்டில் பதிவு செய்து காட்சிப்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

## புத்தாண்டில் பொங்கட்டும் புது வாழ்வு

புதுவுலகம் பிறக்கும் இந்நாள் நன்னாளாம்!
எந்நாளும் இது சிறக்கப் பொன்னாளாம்!

புத்தாண்டில் பொங்கட்டும் புது வாழ்வு!
முத்தாட்டம் வெளுக்கட்டும் நம் உயர்வு!

அறியாமை நமை விட்டும் ஒழியட்டும்!
புத்தூக்கம் இப் பெருநாளில் மலரட்டும்!

மத்தாப்பாய் சில்லென்று ஒளி பரவட்டும்!
வான் தாரகைகள் வண்ணம் தூவட்டும்!

நல்லார் பலர் ஆசி நமை வாழ்த்தட்டும்!
எல்லாரும் நலம் பெறவே நல்லாண்டாகட்டும்!

**ஜவ்ஹர்,** கிண்ணியா





## புது வருடம்

பழையன கழிக்க
புதியன புகுத்த
புதியதோர் ஆண்டில்
புது வாழ்வு தொடங்க

பகைமைகள் மறக்க
பந்தங்கள் சிறக்க
உறவுகள் பெருக்க
உவப்புடன் வாழ

உள்ளங்கள் மகிழ
உதடுகள் சிரிக்க
எண்ணமே வாழ்வாய்
எதிர்காலம் அமைய

அன்பை விதைக்க
ஆற்றலை வளர்க்க

பண்பை பரப்ப
பாசத்துடன் வாழ

இல்லம் செழிக்க
இன்புற்று வாழ
இருபத்தி மூன்றே
இனிதாக வருக..!

கவலைகள் கலைந்திட
கனவுகள் ஜெயித்திட
உணர்வுகள் உயிர் பெற
உதித்திடு புத்தாண்டே..!

**மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி.

## பாறையில் முளை...



பச்சை மரங்களின் வேர்
இச்சையோடு இளகிச் செல்லும்
கற்பாறைகள்

வீரியம் இருந்தால்
பாறையாயினும் வெளிப்படுவாய்
பாரிய மரமாய்

நம்பிக்கை இழக்காதே
நானிலத்தில் துவளாதே
சிறுவிதையே விருட்சம்
அடைவாய் வாழ்வில் உச்சம்

இடமே தடை
இருப்பினும் விடாதே
இறுமாப்புடன் உடை
இளகிடும் பாறையில் முளை

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

## பெருமை தானே பேரா!



முப்பத்தாறு மாதங்கள்
முத்தாய் !பவனி சென்றிடினும்
சிட்டாய்த் துடிக்கும குறும்புகள்
சிகரத்தை தொடுதுபார்!சிரித்து
மகிழுது பார்கவலை மறந்து!

சூரியனை சந்திரனை
தரம்பிரித்து
சூழலால் பாடலால்
அதனைக்காட்டி
ஆங்கிலத்தில் பேசம்
உன்பேச்சு
அழுகுப் பேச்சு
எப்படித்தான் எங்களுக்குள்
ஏற்பதுவோ !
தெரியவில்லை

சில்ரன் பார்க்கென்றால்
சிறகடித்துப் பறக்கிறாய்
பால்மா பக்கெட்றென்றால்
கணக்கின்றி குடிக்கின்றாய்!

யார் விருப்பமென்றால்
என் அப்பா என்கிறாய்
உன் கல்வி என்னவெனில
டாக்டரெனக் கூறுகிறாய்!

பகிடிக்கு அடிப்போரை
எட்டியும் பாராய் !
ஏன் என்று கேட்டால்
ஏரெடுத்து பார்க்கமாட்டாய்
பள்ளிவாசல் பாங்கு கேட்டால்
பந்திக்கு முந்துகிறாய்
பாலகன் நீதானே எனின்
பக்குவமாய் சிரிக்கிறாய்!

உன்சிரிப்பு உன்னழுகை
உவகைதானே
உன்னைப் தாய் தந்தைக்கு
பெருமைதானே! பேரா

**தோப்பூர். எஸ்.சிராஜ்தீன்**
நற்பிட்டிமுனை தினகரன் நிருபர், கல்முனை.

## கடவுள் மீது கடுங்கோபம்



சிறு உயிர்கள் வதைக்கப்பட்டது
அப்போதுகடவுள் எங்கே போனார்

பாலியல் வன்கொடுமை நடக்கின்றது
எம் கடவுள் என்ன செய்கின்றார்

சதிகாரன் பக்கம் நீதி நிலைக்கின்றதே
கடவுள் ஏன்அவன்பக்கம் சாய்ந்தார்

விதைத்தவன் பயிர்கள் வாடிட
விழிநீர் இறைக்கின்றான்
இறக்கின்றான்
இறைவன் ஏன் மழை தரவில்லை


அவன் வாழும் தலங்களில்
தீயவர் தீச்செயலால்

இரத்தம் பெருக்கெடுத்து பாய்கின்றது
தடுத்தருள ஏன் வரவில்லை
தொற்று கிருமியால்
கொத்துக்கொத்தாய்
சாவு விழும் போது
இந்த சாமி எங்கே போனார்

இன்று வரையும் கடவுள் இருக்கின்றா?
இல்லையா ? என்றிருந்தாலும்
பிரபஞ்சத்தை அற்புத சக்தி
இயக்கிக்கொண்டிருக்கின்து
என நம்புகின்றோம்.ஆதலால்
கடவுள் மீது கடுங்கோபம் கொள்கின்றோம்.

**மட்டுநகர் கமல்தாஸ்**

## காதல் செய்வோம்



மீண்டுமொரு முறை
காதல் செய்வோம்
மீண்டெழா துயரங்களை
மறந்து.

ஏழ்மைக்குள் பூத்த
காதல் அகிலம்
பேச மறந்து
போகிறது இன்பங்களைச்
சுமந்து.

குப்பைகளைக் கொண்டு
அலங்கரித்து காட்சி
தருகிறது அழகியவள்
அலங்காரமில்லாது அடி
வைத்துப் போன
பாதை வழிகள்
எங்கும்.

நம் காதலை

கொண்டாட வித
விதமாய் உணவிடுக்கு
பிறருக்கு உபத்திரமில்லாது
போனதாலின்று.

அழகு புன்னகையோடு
அகிலங்கள் யாவும்
அதிர்ந்து போக
அழகியவள் அம்மாவானால்
பிச்சைக்காரியென பெயர்
கொண்டு.

பணமில்லாது போனாலும்
பிணமான பின்பு
இடமுண்டென அழுது
சிரிக்கிறோம் இந்த
வாழ்வில் தினமும்.

**பொத்துவில் அஜ்மல்கான்**

## மனமே நீ ஒரு மாயக்கண்ணாடி !

மனமே நீ
நினைவின் திசுவா
அதிலே நான் உன்தன் சிசுவா
அவள் அருகில்
கனாவைப்போல் காதல் தந்தாய்
அவள் தொலைவில்
வினாவைப்போல் விடைகள் கொண்டாய் !

அவள் விரல் தொடும்
அருகில் நீ என்னை
விலகச் சொன்னாய்
அவள் விழிபடும் தொலைவில்
நீ என்னை விரண்டோடச் சொன்னாய்
விதி என்ற விம்பம் கொண்டு
என்னை புதிதென்று காட்டும்
உன்னை போல் மனமே
நான் இதுவரை கண்டதில்லை

ஓர் மாயக்கண்ணாடியை !

**ஐ.எம்.அஸ்கி**
அட்டாளைச்சேனை

## விஷ்வா...



புதுப்புனலுக்கு
புதுமெருகூட்டி
புதுப்புது வடிவம் தந்து
புதுமை பல படைத்தாய்..

பக்க வடிவமைப்பை
பல காலம்
பக்குவமாய் செய்தாய்

லேக்ஹவுஸ் தான் உனக்கு
முதல் மனைவி
முதல் இல்லம்
முதல் தோழி
முதல் உறவு
இன்று நீ
பிரிந்து சென்றாலும்
உன்னுடனான நேசம்
கடுகளவும் குறையாது

சென்று வா நண்பா
கையளவு உலகம்
கடலளவு நட்புகள்
கரைந்திராத ஞாபகங்கள்
காலம் நம்மை இணைக்கும்

**பாஹிம்**

***(நீண்டகாலம் தினகரனில் பணியாற்றி ஓய்வு பெற்று செல்லும் பக்கவடிவமைப்புப் பிரிவு நண்பர் விஷ்வகாந்தனுக்காக இந்த நினைவுக் கவிதை. நீண்டகாலம் புதுப் புனல் பக்கவடிவமைப்புச் செய்த அவரின் கைவண்ணத்தில் உருவாகும் இறுதி புதுப் புனல் மட்டுமன்றி இந்த வருடத்தின் இறுதிப் புதுப்புனல் - ஆசிரியர்)***

## மரங்களின் குழந்தைகள்

சூரியன் அஸ்தமிக்கும் வேளை
விடிகின்ற எங்களின் பொழுதுகள்
விடிகின்ற வேளை
அஸ்தமித்து விடுகிறது

நிலவு மட்டும் உலவும்
எங்கள் வானம்
சூரியனை காண்பதில்லை.

தாய்ப்பாலன்றி வேறு
எப்பாலும் அருந்தா எங்கள்
குழந்தைகளின் ஆரோக்கியம்
உங்கள் குழந்தைகளுக்கு வெகுதூரம்.

தலைகீழாய் கிடக்கும்
இந்த உலகத்தை இருட்டில்
நேராக காணும் பாக்கியம் படைத்தவர்கள்
நாங்கள் என்றாலும்
சூரியனை தரிசிக்கும் கண்கள் இல்லா
துர்பாக்கியசாலிகள்.

மலட்டு மரங்களில்
கருப்புக் காய்களாய்த் தொங்கும்
எங்களின் உருவங்கள்
தாய்மையை அளிப்பதால்
நாங்களும் குழந்தைகளாகிறோம்

உண்பதும் கழிவும் ஒருவாயில் என்றாலும்
ஒரு சில வியாதிகளுக்கு
மருந்தாகி மடியும் வெளவால்கள்



எங்களின் தியாகம்
மனிதர்களில் இல்லாதது.

**மெய்யன் நடராஜ்**

# சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்றுமதி துறை மேம்பாட்டிற்கு செலான் வங்கி வழிகாட்டல்



இலங்கையின் தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களின் திறனை ஊக்குவிக்கும் பொறுப்பு வாய்ந்த வங்கியும் அன்புடன் அரவணைக்கும் வங்கியுமான செலான் வங்கி தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பு வழங்கக்கூடிய துறையாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை ஏற்றுமதியாளர்களை இனங்கண்டுள்ளது.

அந்நியச் செலாவணியில் வருமானமீட்டுவது என்பது பொருளாதாரத்தின் தற்போதைய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. அந்நியச் செலாவணி இருப்புகளின் வளர்ச்சியில் வெளிநாட்டுப் பணியாளர்களின் பங்களிப்பு பிரதான பங்களிப்பை வழங்கும் நிலையில் அவ்வாறு அனுப்பப்படும் பணத்தில் வீழ்ச்சி மற்றும் உத்தியோகபூர்வமற்ற சட்டவிரோதமான முறைகளில் வெளிநாடுகளிலிருந்து பணத்தை அனுப்பும் முறைகள் அதிகரித்துள்ள நிலையில் நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் நாட்டின் வருமான மூலங்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில்இ ஏற்றுமதியை அதிகரிப்பதனூடாக இந்த செயன்முறையை வலுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

செயற்பாடுகளுக்கான பிரதி பொது முகாமையாளர் மலிக் விக்ரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் "இலங்கையை இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீட்பதில் உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. எனவே சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைத் துறையில் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதை செலான் வங்கி இலக்காகக் கொண்டுள்ளது. அதனூடாக இந்த நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க ஆதரவளிக்கக்கூடியதாக இருக்கும்." என்றார்.

விக்ரமநாயக்க தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் "உள்நாட்டு ஏற்றுமதியாளர்களின் மீது கவனம் செலுத்த வேண்டியதை நாம் இனங்கண்டிருந்தோம். ஏனெனில் அதில் அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன. மேலும் ஏற்றுமதித் துறையில் பிரவேசிக்கும் பெருமளவான சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு சிறந்த செயற்பாடுகள் மற்றும் தமது வியாபாரங்களை விரிவாக்கம் செய்வது தொடர்பில் போதியளவு வழிகாட்டல்கள் சில சந்தர்ப்பங்களில் வழங்கப்படுவதில்லை. எனவே ஏற்றுமதியில் ஈடுபடும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு அறிவூட்டி வெளிநாட்டு கொள்வனவாளரின் தெரிவுக்குரிய வியாபார பங்காளராகத் திகழக்கூடிய வகையில் வலுவூட்டும் நடவடிக்கைகளை வங்கி முன்னெடுத்திருந்தது." என்றார்.




# மின் கட்டண அதிகரிப்பிற்கு மிகச்சிறந்த தீர்வு அபான்ஸ் GreenPro விசேட சேமிப்பு குளிர்சாதனப்பெட்டி



இந்த பண்டிகைக் காலத்தில் வானளவு உயரும் மின்சார கட்டணத்திற்கான மிகச்சிறந்த தீர்வை நீங்கள் பெற்றிடுங்கள். அபான்ஸ் GreenPro சிறப்பு சேமிப்பு குளிர்சானப்பெட்டி வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடிய சிறப்பு மின்சார சேமிப்பு சகிதம் இலகு விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய குளிர்சாதனப் பெட்டியாகும். இதில் உள்ள கவர்ச்சிகரமான நிறைவு உங்கள் இல்லத்திற்கு புதிய தோற்றத்தை பெற்றுத்தருவதோடு, இதன் பிரம்மாண்ட கொள்ளவு காரணமாக தேவையான அளவு உணவுகளை பாதுகாப்பான முறையில் களஞ்சியம் செய்யும் வசதி உள்ளது.

பண்டாரகமை அபான்ஸ் தொழிற்சாலையில் GreenPro விசேட சேமிப்பு குளிர்சாதனப் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதோடு, நம்பகமான உள்நாட்டு உற்பத்தியாக நீண்ட நாட்கள் பயன்படுத்தக்கூடிய தகுதியை இது கொண்டுள்ளது. ஏனைய போட்டி உற்பத்திகளோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு குளிர்சாதனப் பெட்டி அபான்ஸ் GreenPro குளிர்சாதனப் பெட்டியாகும். இதில் கொப்பர் டீயூப் இருக்கும் காரணத்தினால் நீடித்துழைக்கும் தன்மையை இது கொண்டுள்ளது. மேலும் நம்பகமான விற்பனையின் பின்னரான சேவையுடன் கொம்பிரெஸருக்கு 10 வருட உத்தரவாதமும் வழங்கப்படுகிறது.

GreenPro குளிர்சாதனப் பெட்டியில் இருக்கும் மற்றுமொரு சிறப்பம்சம் யாதெனில் இத்தயாரிப்பு உள்நாட்டு உற்பத்தி என்னும் காரணத்தினால் தேவையான அளவு உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கையில் அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும் முன்னணி குளிர்சதானப் பெட்டி அபான்ஸ் GreenPro குளிர்சாதனப் பெட்டியாகும். அபான்ஸ் GreenPro சுப்பர் சேவர் குளிர்சாதனப்பெட்டியானது நிலையான நிலைமைகளின் கீழ் செயல்படும் போது 75 வாட்களை மட்டுமே பயன்படுத்துகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த R600C குளிர்பதன வாயு மின்சாரத்தை சிறப்பாக சேமிக்க மிகவும் உதவியாக உள்ளது.

# தொடர்ந்து 14வது வருடமாக 'பிஸ்னஸ் டுடே டொப் 40' இல் முன்னணி நிலையில் இருக்கும் கொமர்ஷல் வங்கி

2022 நவம்பரில் வெளியிடப்பட்டுள்ள பிஸ்னஸ் டுடேயின் அண்மைய பட்டியலில் கொமர்ஷல் வங்கி தொடர்ந்து 14வது வருடமாக உயர் தரத்தில் உள்ள வங்கியாகவும் இலங்கையில் உள்ள மிகச் சிறந்த செயற்பாடு மிக்க ஐந்து கம்பனிகளில் ஒன்றாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி ஒட்டு மொத்த தர வரிசையில் இவ்வாண்டு மூன்றாம் இடத்தில் உள்ளது.

"பிஸ்னஸ் டுடேயின் மதிப்பீட்டுக்கு உட்பட்ட காலமானது பொதுவாக வர்த்தகங்களுக்கும் குறிப்பாக வங்கிகளுக்கும் மிகவும் சவால் மிக்க ஒரு காலமாகும்" என்று கூறினார் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க. "இலங்கையில் ஒட்டு மொத்தமாக மிகச் சிறந்த செயற்பாடு மிக்க மூன்றாவது கம்பனி என்ற நிலையானது நாம் வாழும் இந்த பூமிக்கும் எமது சமூகத்துக்கும் உரிய கடப்பாடுகளை பூhத்தி செய்யும் அதேவேளை சவால்களுக்கு முகம் கொடுக்கும் மற்றும் பங்குதாரர்களின் எதிர்ப்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வங்கியின் ஆற்றலுக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாக எம்மை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

20202021ல் வங்கியின் செயற்பாடுகள் பற்றி கருத்து வெளியிட்டுள்ள பிஸ்னஸ் டுடே "செயற்பாட்டு செலவினங்களை கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருமான செலவின் விகிதாசாரம், இலாபத்தன்மை என்பனவற்றில் எந்த வீழ்ச்சியும் ஏற்படாமல் தடுத்து கொமர்ஷல் வங்கி 2021ஐ திடமான வளர்ச்சியுடன் முடிவு செய்துள்ளது. தனது மூலோபாய தூண்களுக்கு இசைந்து உற்பத்தி மற்றும் செயற்பாட்டு சிறப்பாற்றலில் விவேகமான வளர்ச்சியோடும் 2021ஐ கொமர்ஷல் வங்கி நிறைவு செய்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"வர்த்தகங்களுக்கு தடைக்காலம் விதிக்கப்பட வேண்டும் என்ற அரசின் வேண்டுதலுக்கு வங்கி செவிசாய்த்தது. செயல்திறன் மிக்க தொடர்பாடல் மற்றும் நெருக்கமான ஊழியர் மேற்பார்வை என்பனவற்றின் மூலம் மொத்த முற்பண வரிசையில் 25 வீதம் வங்கியால் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டது" என்று பிஸ்னஸ் டுடே மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் இவ்வாண்டுக்கான வர்த்தகச் சின்னமாக மகுடம் சூட்டப்பட்ட செலிங்கோ லைஃப்




வர்த்தக முத்திரை பிரிவில் அதி உச்ச வெற்றியை செலிங்கோ லைஃப் பெற்றுக் கொண்டது. இவ்வாண்டில் இலங்கையின் வர்த்தகச் சின்னமாக அதற்கு மகுடம் சூட்டப்பட்டது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் இந்த உயர் விருதை வழங்கி உள்ளது. வணிகத் துறையின் அனைனத்து வர்த்தக முத்திரைளின் மத்தியில் இந்தத் தெரிவு அமைந்துள்ளது.

ஆயுள் காப்புறுதி சந்தைத் தலைவர்கள் 2022ன் சேவைப் பிரிவு வர்த்தக முத்திரை தங்க விருதையும் சென்றனர். இது 20212இலும் பெறப்பட்டதாகும். ஆண்டின் மிகவும் "Innovative" வர்த்தக முத்திரை பிரிவில் வெள்ளி விருதும் வெல்லப்பட்டது 'செலிங்கோ லைஃப் Pension Saver'' க்கு கிடைத்த மகத்தான வெற்றி இதுவாகும்.

'2022 ஐ முடிவுக்கு கொண்டு வரும் மிகச் சிறந்த மார்க்கமாக இது அமைந்துள்ளது' என்று கூறினார் செலிங்கோ லைஃப் தலைவர் ஆர்.ரெங்கநாதன். "துன்பங்கள் பண்புகளை சோதிப்பதற்கான ஒரு உண்மையான களமாகும். எமது ஞாபகத்தில் உள்ள ஆண்டுகளில் மிகவும் சவால் மிக்க ஒரு ஆண்டில் 'வருடத்துக்கான வர்த்தகச் சின்னம்" என்ற தெரிவு எமது முத்திரையின் ஸ்திரத்தன்மையையும் சுறுசுறுப்பையும் வெளிப்படுத்துவதற்கு சாத்தியமான மிகச் சிறந்த வழியாகும். செலிங்கோ லைஃப் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் துணிவு மற்றும் வேட்கை என்பனவற்றுக்காகவும் எமது பாதுகாப்பில் உள்ள ஒரு மில்லியன் இலங்கையர்களின் ஆயுளுக்காகவும் நாம் இதை அர்ப்பணம் செய்கின்றோம்" என்று அவர் மேலும் கூறினார். ஒவ்வொரு ஆண்டும் தொழில்சார் சந்தைப்படுத்தல் நிபுணர்களுக்கான மிகப் பெரிய நிகழ்வான SLIM சிறந்த வர்த்தக முத்திரை (SLIM Brand Excellence)விருது விழாவில் ஐந்து பிரதான விருதுகளுடனும், பத்து விஷேட விருதுகளுடனும் வர்த்தக முத்திரைச் சின்னங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

# MMCA இலங்கையுடன் இணைந்து 'சந்திப்புகள்' கண்காட்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு



பெப்ரவரி 2022, ஐரோப்பிய ஒன்றியம் (EU) நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தின் (MMCA இலங்கை) இணைந்து, அதன் இரண்டாம் கண்காட்சியான, பெப்ரவரி 11, 2022ல் திறந்து வைக்கப்பட்ட 'சந்திப்புகள்' கண்காட்சிக்கு ஆதரவளிக்கின்றது.

MMCA இலங்கையின்தலைமை எடுத்தாளுனரான ஷர்மினி பெரெய்ரா, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவை பற்றிக்கூறிய நேரம் கூறியதாவது, "ஐரோப்பிய ஒன்றியம் 'சந்திப்புகள்' கண்காட்சிக்கு ஆதரவளித்ததால், எம்மால் ஆறு மாதங்களுக்கு பொது மக்களுக்கான இலவச நிகழ்ச்சிகளை நடாத்த முடிந்தது. பல நிகழ்ச்சிகள் நாட்டில் பல்வேறு பகுதிகளில் மக்கள் மிகக் கடினமான பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைக்கு எதிராக நடாத்திய அரங்கலய (போராட்டம்) காலத்தில் வழங்கப்பட்டது." MMCA இலங்கைக்கு நாட்டின் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் பல விருந்தினர்கள் வருகை தந்தனர். விருந்தினர்களின் எண்ணிக்கையை பற்றி பெரெய்ரா கூறிய பொழுது, "புதிர் நாட்கள், கலந்துரையாடல் சார்ந்த நாட்களில் நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமான விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர். இதனூடாக எம்மைப் போன்ற அருங்காட்சியங்கள் பொது மக்களுக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள முடிகின்றது."

இம் மானியத்தினூடாக, ஐரோப்பிய ஒன்றியம் 1,087 பங்குபெற்றாளர்களை உள்ளடக்கிய 61 இலவச பொது நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளித்தது. இவற்றுள் 11 பயிற்சிப் பட்டறைகளின் மூலமாக பங்குபெற்றாளர்களுக்கு, கலைப்படைப்புகளினூடாக நேரிடையான ஊடாட்டத்தை ஒழுங்கு செய்ய முடிந்தது. "இப் பயிற்சிப் பட்டறைகள், கண்காட்சியுடன் தொடர்புபட்ட விடயங்களை மையப்படுத்தி, பங்குபெற்றாளர்களுக்கு முத்திரைகள் மூலமாக வரலாற்றை கற்றல், கதைசொல்லல், தாவரம் வரைதல், பார்ப்பதினூடாக எழுதுதல், தையல் மற்றும் அலங்காரத்தையல், ஒரிகாமி, சூழலுடன் இசைந்து வாழ்தல் என வெவ்வேறு விடயங்களை உள்ளடக்கியது." என MMCA இலங்கையின் கல்வி மற்றும் பொது நிகழ்ச்சிகளின் துணை எடுத்தாளுனர் பிரமோதா வீரசேகர குறிப்பிடுகிறார்.

# DIMO மற்றும் BOSCH இடையேயான மாறாத ஆறு தசாப்த பந்தம் தொடர்கிறது




இலங்கையில் 'Certified BOSCH Diesel Service Workshop' எனும் தனது வலுவான நிலையை உறுதிப்படுத்துவதன் மூலம் BOSCH உடனான தனது நீண்டகால ஒத்துழைப்பை DIMO Diesel Lab மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இந்த இரு நிறுவனங்களின் கூட்டாண்மை தொடர்பான உத்தியோகபூர்வ பங்காளித்துவ புதுப்பித்தல் நிகழ்வு DIMO நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே மற்றும் Robert Bosch Lanka (Pvt) Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளர் நவநீத கிருஷ்ணன் உள்ளிட்ட BOSCH மற்றும் DIMO நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து அண்மையில் DIMO தலைமையகத்தில் நடைபெற்றது. . Diesel Fuel Injection உபகரணங்கள் தொடர்பான சேவைகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் BOSCH நிறுவனத்துடனான வளர்ச்சியைக் கொண்ட சரியான பங்காளி எனும் வகையில் DIMO நிறுவனத்தின் ஆறு தசாப்தங்களாக அழியாத பந்தத்தை இந்த கூட்டாண்மை குறித்து நிற்கிறது.

DIMO நிறுவனத்தின் டீசல் ஆய்வு கூடமானது BOSCH நிறுவனத்தின் அனைத்து டீசல் பம்ப் தொடர்பான பழுது பார்த்தல் மற்றும் சேவை வழங்கல்களை மேற்கொள்கின்றது. அத்துடன் இது முழுமையான உயர் தொழில்நுட்ப சோதனை உபகரணங்களை கொண்டுள்ளதோடு அவை BOSCH நிறுவனத்தின் பயிற்சிகளைப் பெற்ற உயர் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த டீசல் நிபுணர்களால் திறமையாக இயக்கப்படுகின்றன. கொழும்பு தவிர்ந்த அநுராதபுரம் மற்றும் சியம்பலாபே ஆகிய இடங்களில் தனது கிளைகளை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. இதன் மூலம் தமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களுக்கு அருகிலேயே உலகத் தரம் வாய்ந்த டீசல் பழுது பார்க்கும் தொழில்நுட்பம் மற்றும் வசதிகளைப் பெறுவதற்கான வசதியை நிறுவனம் வழங்குகிறது.

# பண்டிகைக் காலத்தில் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கும் வகையில் 'Season of Giving' திட்டத்தை அறிமுகப்படுத்தும் HNB




இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கிகளில் ஒன்றான HNB, பண்டிகைக் காலங்களில் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளின் மன உறுதியை மேம்படுத்துவதற்காக Caritas Sri Lanka உடன் இணைந்து அதன் முன்னணி டிஜிட்டல் கட்டணப் செயலியான (App) SOLO மூலம் 'Season of Giving' திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் சமூகப் பிரிவான ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான Caritas Sri Lanka, நாடு முழுவதும் உள்ள 12 மறைமாவட்டங்களில் முக்கிய மனித மேம்பாட்டுத் திட்டங்களுக்காகப் பணிபுரியும் மிகப்பெரிய மற்றும் மிகவும் மரியாதைக்குரிய மனிதாபிமான அமைப்புகளில் ஒன்றாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் முகமாக Caritas தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சிறப்பு நிகழ்விற்கு கொழும்பு துணை ஆயர் அதி வணக்கத்திற்குரிய மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, HNB இன் பிரதான செயற்பாட்டு அதிகாரி டில்ஷான் ரொட்றிகோ மற்றும் Caritas Sri Lanka வின் தேசிய தலைவர் வண. அருட்தந்தை லூக் நெல்சன் ஆண்டகை, HNBஇன் பிரதி பொது முகாமையாளர் டிஜிட்டல் வணிகம், சம்பிக்க வீரசிங்க உள்ளிட்ட HNB இன் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் பங்குபற்றினர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த HNB இன் பிரதான செயற்பாட்டு அதிகாரி டில்ஷான் ரொட்றிகோ, "தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, இலங்கையில் உணவு பற்றாக்குறை மற்றும் சுகாதாரம் மற்றும் தங்குமிட வசதிகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு நாளும் 4.8 மில்லியன் குழந்தைகளுக்கு இந்த அடிப்படை வசதிகள் கூட இல்லை என்று தரவுகள் காட்டுகின்றன. இந்த குழந்தைகள் ஒவ்வொருவரையும் சென்றடைய எங்களிடம் பணமோ வசதியோ இல்லாததால், நாங்கள் உதவக்கூடிய குழந்தைகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக Caritas Sri Lankaவுடன் கைகோர்த்துள்ளோம். இந்த பண்டிகைக் காலத்தில் தேவைப்படுபவர்களுக்கு வசதிகளை வழங்க பலர் இந்த தொண்டு நிறுவனத்துடன் இணைந்து கொள்வார்கள் என நம்புகிறோம்" என தெரிவித்தார்.

HNB SOLO மூலம் வழங்கப்படும் அனைத்து நன்கொடைகளுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களால் செய்யப்படும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும், வங்கி கூடுதல் நன்கொடையை நேரடியாக Caritas Sri Lanka கணக்கிற்கு வரவு வைக்கும். மேலும், HNB SOLO App உள்ள Direct Pay தேர்வின் மூலம் நிறுவனத்திற்கு நேரடியாக நன்கொடைகளை வழங்க வங்கி வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

# கால்பந்து ஜாம்பவான் பீலே காலமானார்



கால்பந்து வரலாற்றில் தோன்றிய மிகச் சிறந்த வீரர் என வர்ணிக்கப்படும் பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே தனது 82ஆவது வயதில் காலமானார்.

தனது 21 ஆண்டு கால்பந்து வாழ்வில் 1,363 போட்டிகளில் 1,281 என்ற உலக சாதனை கோல்களை புகுத்திய பீலே தனது நாட்டுக்காக 92 போட்டிகளில் 77 கோல்களை பெற்றுள்ளார்.

1958, 1962 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை வென்று, மூன்று முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி ஒரே வீரர் என சாதனை படைத்த பீலேவுக்கு 2000ஆம் ஆண்டில் நூற்றாண்டின் சிறந்த வீரர் என பிஃபா விருது வழங்கியது.

அவர் அண்மைய ஆண்டுகளில் சிறுநீரக மற்றும் சுக்கிரியன் சுரப்பி பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்தார்.

வழக்கமான மருத்துவச் சோதனையின் போது கட்டி ஒன்று கண்டறியப்பட்டதை அடுத்து சாவோ போலோவில் உள்ள அல்பர்ட் ஐன்ஸ்டைன் மருத்துவமனையில் கடந்த 2021 செப்டெம்பரில் பீலேவின் பெருங்குடலில் இருந்த அந்தக் கட்டி அகற்றப்பட்டது. இந்நிலையில் கடந்த செப்டெம்பரில் அவர் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது மகள் கெலி நசிமென்டோ, பீலேவின் உடல் நிலை பற்றி சமூகதளத்தில் தொடர்ச்சியாக தகவல்களை வெளியிட்டு வந்தார்.

கடந்த வியாழனன்று மருத்துவமனையில் பீலேவின் உடலுடன் குடும்பத்தினர் கைகோர்த்து நிற்கும் படம் ஒன்றை பதிவேற்றிய நசிமென்டோ, 'எல்லாவற்றுக்கும் நாம் உங்களுக்கு நன்றி கூறுகிறோம். நாம் உங்களுக்கு எமது அளவற்ற அன்பை கூறிக்கொள்கிறோம். உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

பீலேவின் முந்தைய மருத்துவ நிலையுடன் தொடர்புபட்ட பெருங்குடல் புற்று நோய் வளர்ந்ததன் விளைவாக பல உடல் உறுப்பு செயலிழந்த நிலையில் பீலே மரணித்ததாக மருத்துவமனை உறுதி செய்தது.

'பீலே வரலாற்றில் தோன்றிய சிறந்த விளையாட்டு வீரர் என்பதற்கு அப்பால் மேம்பட்டிருந்தார்' என்று பிரேசில் கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பிரேசில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ பீலேவின் மரணத்திற்கு நாட்டில் மூன்று நாள் துக்கதினத்தை அறிவித்தார்.

பீலேவின் முன்னாள் கழகமான சான்டோஸ் அவரது இறுதிக் கிரியை பற்றிய விபரங்களை வெளியிட்டது. வரும் திங்கட்கிழமை அவரது உடல் மருத்துவமனையில் இருந்து கழகத்தின் எஸ்டாடியோ அர்பானோ கல்டைரா மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. அங்கு மைதானத்தின் நடுவில் மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படும்.

வரும் செவ்வாய்க்கிழமை குடும்ப இறுதிச் சடங்கிற்கு சாவோ போலோவில் உள்ள நான்டோஸ் வீதிகள் வழியாக பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

பீலே என்று பெரிதும் அறியப்படும் எட்சன் அரன்டஸ் டு நசிமென்டோ, 1958இல் சுவீடனில் நடந்த உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் பிரேசில் சம்பியனானதைத் தொடர்ந்தே 17 வயதான அவர் உலக நட்சத்திரமாக பிரபலம் பெற்றார். அந்த உலகக் கிண்ணத்தில் தனது திறமையால் நொக் அவுட் போட்டிகளில் வைத்து பிரேசில் ஆரம்ப அணியில் இடம்பிடித்தார்.

வேல்ஸுக்கு எதிரான காலிறுதியில் அவர் பெற்ற ஒரே கோலே பிரேசிலின் வெற்றியை உறுதி செய்தது. பிரான்ஸுக்கு எதிரான அரையிறுதியில் பீலே ஹட்ரிக் கோல் புகுத்த பிரேசில் 5–2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக பீலே தனது கழக மட்டப் போட்டிகளை ஆரம்பித்தோடு அவர் கழக மட்டத்தில் மொத்தம் 643 கோல்களை புகுத்தியுள்ளார். கண்காட்சிப் போட்டிகளையும் சேர்த்து அவர் பெற்ற கோல்கள் எண்ணிக்கை 1,000ஐ தாண்டியது.

1962ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் ஆடும்போது 21 வயதை எட்டியிருந்த பீலே மெக்சிகோவுக்கு எதிரான முதல் போட்டியில் அபார கோல் ஒன்றை புகுத்தி பிரேசிலின் வெற்றிக்குக் காரணமானதோடு, அடுத்த போட்டியில் காயம் காரணமாக ஆடவில்லை.

அந்த உலகக் கிண்ணத்தின் இறுதிக் கட்டப் போட்டிகளில் அவரது திமையை காயம் தடுத்தது. 1966 உலகக் கிண்ணத்தில் உபாதையால் அவரால் ஆட முடியாமல் போனது. எனினும் 1970 உலகக் கிண்ணத்தில் அவரது திறமை முழுமையாக வெளிப்பட்டது. இத்தாலிக்கு எதிரான இறுதிப் போட்டியில் பிரேசில் 41 என்ற கோல் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியில் ஆரம்ப கோலை புகுத்தியவர் பீலே ஆவார்.





உலகத் தலைவர்களும் விளையாட்டு வீரர்களும் பீலேக்குப் புகழாரம் சூட்டி வருகின்றனர்.

காற்பந்தாட்டத்தைக் கலையாக்கியவர் பீலே என்று பிரேசில் நட்சத்திரம் நெய்மார் கூறினார்.

பிரேசிலும் காற்பந்தும் பீலேவால் அங்கீகாரம் பெற்றதாய் அவர் குறிப்பிட்டார். 'பீலே மறைந்துவிட்டார். ஆனால் அவரது விந்தை மறையாது. பீலேவுக்கு மறைவில்லை' என்றார் நெய்மார்.

பீலே மறைந்த செய்தி கேட்டவுடன் கால்பந்து ரசிகர்கள் சிலர் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

சிலர் அவரது எண் கொண்ட ஜெர்சியை அணிந்து சென்றனர்; சிலர் கால்கடுக்க ஓடிச் சென்றனர்; பீலே ஒரு விளையாட்டாளராக அதிகக் காலம் இருந்த சான்ட்டோஸ் விளையாட்டரங்கத்தில் பலர் மலர்க்கொத்துகளை விட்டுச் செல்கின்றனர்.

'மறையா மன்னன் பீலே' என்ற வாசகங்களை ஏந்திப் பலர் மருத்துவமனைக்கு வெளியில் கண்ணீருடன் காணப்பட்டனர். பிரேசில் தொலைக்காட்சி சேவைகள் அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணங்களையும் அவரது மறைவையும் ஒளிபரப்புகின்றன.

# யாழ். வீரரான விஜயகாந்த் வியாஸ்காந்த் பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் ஒப்பந்தம்



லங்கா பிரீமியர் லீக்கில் (எல்.பி.எல்) ஜப்னா கிங்ஸ் அணிக்காக விளையாடிய யாழ். வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்த் பங்களாதேஷில் நடைபெறவுள்ள பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் ஒப்பந்தமாகியுள்ளார்.

வியாஸ்காந்த் எல்.பி.எல் தொடரில் 8 இன்னிங்ஸ்களில் 13 விக்கெட்டுகளை சாய்த்து ஜப்னா கிங்ஸ் அணி ஹட்ரிக் கிண்ணம் வெல்வதற்கு உதவியாக இருந்ததுடன், சிறந்த வளர்ந்துவரும் வீரருக்கான விருதையும் வென்றிருந்தார்.

இந்நிலையில் வியாஸ்காந்த் தற்போது பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் செட்டகிராம் செலஞ்சர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அவருடைய முகாமையாளர் ஷியாம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஷியாம் குறிப்பிடுகையில், "இளம் வீரருக்கு இதுவொரு சிறந்த வாய்ப்பு. இந்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த அணிக்கு நன்றியாக உள்ளோம். அங்கு கிடைக்கும் அனுபவம் வியாஸ்காந்திற்கு அதிகமாக உதவும்" என்றார்.

எல்.பி.எல் தொடரில் வாய்ப்பினை சரியாக பயன்படுத்திக் கொண்ட வியாஸ்காந்திற்கு வெளிநாட்டு தொடர் ஒன்றில் விளையாட கிடைக்கும் முதல் வாய்ப்பு இதுவாகும். வியாஸ்காந்திற்கு வாய்ப்பு கிடைத்துள்ளபோதும், தொடருக்கு செல்வதற்கான அனுமதி இலங்கை கிரிக்கெட் சபையிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை.

செட்டகிராம் செலஞ்சர்ஸ் அணியில் விஜயகாந்த் வியாஸ்காந்த் மாத்திரமின்றி இலங்கை வீரர்களான விஷ்வ பெர்னாண்டோ மற்றும் அஷான் பிரியன்ஜன் ஆகியவர்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளனர். அதுமாத்திரமின்றி வியாஸ்காந்த் உட்பட மொத்தமாக 14 இலங்கை வீரர்கள் பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் விளையாடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கார் விபத்தில் சிக்கி ரிஷாப் பண்ட் காயம்





இந்திய துடுப்பாட்ட வீரர் ரிஷாப் பண்ட் கார் விபத்துக்குள்ளாகி தீவிர காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (30) அதிகாலை 5.15 மணியளவில் ரூர்கீயில் இருந்து புதுடில்லிக்கு பயணித்துக்கொண்டிருந்தபோது அவரது கார் கட்டுப்பாட்டை இழந்து வீதித் தடுப்பில் மோதி தீப்பற்றியுள்ளது.

இதன்போது காரில் இருந்து வெளியே தப்பியிருக்கும் ரிஷாப் பண்டின் தலை, முதுகுப் பகுதி மற்றும் காலில் காயம் ஏற்பட்டிருப்பதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அவர் டெல்லிக்கு அருகில் இருக்கும் ஷக்ஷாம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து அவர் டஹ்ரதுனில் இருக்கும் தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகடமியின் தலைவர் வி.வி.எஸ் லக்ஷ்மன் ட்விட்டரில் இதுகுறித்து கூறுகையில், "பண்ட் ஆபத்தில் இருந்து வெளியேறிவிட்டார். ஆனால் அவரது காயம் எந்த அளவிற்கு உள்ளது என்பது இன்னும் தெரியவில்லை" என்றார்.

"ரிஷாப்பின் நெற்றியில் இரு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. வலது முழங்காலில் தசைநார் கிழிந்துள்ளது. அவரது வலது முழங்கால் மற்றும் அவரது வலது மணிக்கட்டு, கணுக்கால், கால்விரல் ஆகியவற்றிலும் காயம் ஏற்பட்டது. அவரது முதுகில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டுள்ளன" என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவர் ஜெய்ஷா குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் முடிவுற்ற பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தில் இந்திய அணி வெற்றியீட்டிய இரு டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணியில் இடம்பெற்றார். எனினும் இலங்கைக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் இரு அணிகளிலும் 25 வயதான அவர் இந்திய அணியில் இடம் பெறவில்லை.

# மத்திய ஆசிய மகளிர் கடற்கரை கரப்பந்து: இலங்கை சம்பியன்



பங்களாதேஷில் நடைபெற்ற மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சங்க மகளிர் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை மகளிர் அணி சம்பியனானது.

தோல்வி அடையாத அணியாக கடந்த புதனன்று (28) நடைபெற்ற நேபாளத்துக்கு எதிரான இறுதிப் போட்டியில் 2 நேர் செட்களில் வெற்றி பெற்றதன் மூலம் சத்துரிகா மதுஷானி மற்றும் தீபிகா பண்டார ஜோடி இலங்கைக்கு சம்பியன் பட்டத்தை வென்று கொடுத்தனர்.

பங்களாதேஷின் கொக்ஸ் பஸாரில் நடைபெற்ற மத்திய ஆசிய மகளிர் கடற்கரை கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் பங்களாதேஷைச் சேர்ந்த 2 அணிகள், உஸ்பகிஸ்தானைச் சேர்ந்த 2 அணிகள் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த ஒரு அணியும், இலங்கையைச் சேர்ந்த ஒரு அணியும் பங்கேற்றன.

இந்த வெற்றியின் மூலம் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பிராந்தியங்களுக்கு இடையிலான சர்வதேச கடற்கரை கரப்பந்து சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை இலங்கை அணி உறுதி செய்தது.

சம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணியின் தலைவியாக இராணுவ வீராங்கனை சத்துரிகா மதுஷானி செயல்பட, அவருடன் கடற்படை வீராங்கனை தீபிகா பண்டார விளையாடியிருந்தார்.

# கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி: 4 போட்டிச் சாதனை முறியடிப்பு



தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 51ஆவது சேர். ஜோன் டார்பட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் மேலும் நான்கு போட்டிச் சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியின் இரண்டாவது நாளான கடந்த வியாழக்கிழமை 12 வயதின் கீழ் ஆண்களுக்கான 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மொறட்டுவை புனித செபஸ்டியன்ஸ் கல்லூரி அணி புதிய போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது. இந்தப் போட்டியை நிறைவுசெய்ய 54.5 விநாடிகளை அந்த அணி எடுத்துக்கொண்டது.

இதனிடையே, 13 வயதின் கீழ் மற்றும் 14 வயதின் கீழ் ஆண்களுக்கான 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் வென்னப்புவ புனித ஜோசப் வாஸ் கல்லூரி அணிகள் புதிய போட்டி சாதனைகளுடன் தங்கப் பதக்கத்தை வென்றன.

அத்துடன், 15 வயதின் கீழ் பெண்களுக்கான 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் அம்பகமுவ மத்திய கல்லூரி அணி மாணவிகள் புதிய போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தனர். இந்தப் போட்டியை நிறைவுசெய்ய 51.6 விநாடிகளை அந்த அணி மாணவிகள் எடுத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய பதக்கம் வென்ற மாணவனுக்குப் பாராட்டு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



ஹெம்மாதகமவைச் சேர்ந்த 12 வயது மாணவன் ஸையாப் சியாம் தேசிய ரீதியிலான 100 மீற்றர் மற்றும் 80 மீற்றர் போட்டிகளில் முதலாமிடம் பெற்று, சாதனை படைத்ததை பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்திருந்த வாகனப் பேரணியும் பாராட்டு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை, பள்ளிபோருவ முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர்களின் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், ஹெம்மாத்தகம இளைஞர் அமைப்புக்கள், எமிரேட்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து வாகனப் பேரணியையும், பாராட்டு நிகழ்வினையும் ஏற்பாடு செய்திருந்தன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.